இந்து மதம்
தமிழர் மதமா

எழுத்து அடிகள் B.A

மத்தமிழ் நிலையம்

இந்து மதம் - - -

- - - தமிழர் மதமா?

24 : 21

ஆசிரியர்:

தோழர் - ஈழத்து அடிகள் B. A.

முத்தமிழ் நிலையம்

75, வரதாமுத்தியப்பன் தெரு,

சென்னை—1.

இரண்டாம் பதிப்பு

2000 பிரதிகள்

1947 டிசம்பர்

[காபிரைட்]

விலை அணு 8

16196

Published by,

M. Chakravarti Nainar,

C.I.P. House, Madras, Q.H.M.S. 459.

Arutperunjothi Press, M.S. 396, 2000 23—12—'47.

முகவுரை.

இவ் இருபதாம் நூற்றாண்டு, இதற்கு முற்பட்ட காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆராய்ந்து உண்மை காண அவாவி நிற்கின்றது. முற்கால நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மையென நம்பி, அதனால் இடர்ப்பாடுற்ற தமிழ் மக்கள் பலர் இப்போது விழிப்படைந்து, தங்கள் உண்மைநிலையை அறிந்து செம்மை நெறியில் நின்று மேன்மையுற விரும்புகின்றனர். நந்தமிழ் மக்கள், பொதுவாகப் பல துறைகளிலும் துன்பம் நுகர்ந்து வருகின்றனராயினும், சிறப்பாக '**இந்து மதம்**' என்று சொல்லப்படும் ஆரிய மதத்தினால், அடைந்து வந்த—வருகின்ற கொடுமைகளைச் சுருக்கமாக விளக்கி, இனியும் தமிழ் மக்கள் இவ் இந்து மதச்சுழலில் அகப்பட்டுத் தவிக்காமைப் பொருட்டே, '**இந்து மதமுந் தமிழர் மதமா?**' எனப் பெயரிய இச்சிறிய நூலை எழுத நேர்ந்தது. இந்நூலை இரண்டாவது பதிப்பாக அச்சிட்டுத் தமிழ் மக்கட்கு விழிப்பை உண்டாக்க முன்வந்த **சென்னை முத்தமிழ் நிலைய**த்தாருக்கு என் நன்றி உரித்தாகுக.

"திராவிடநாடு" அலுவலகம்
காஞ்சிபுரம்
25—8—1947

ஈழத்து அடிகள்

ஈழத்து அடிகள்

ஆராய்ந்த

—ஞானப்பால்—

விரைவில் வெளிவருகிறது.

இந்து மதம் தமிழர் மதமா?

இப்போது தமிழ் மக்கள் தங்கள் மதமாக வைத்து வழங்கி வருவது ஆரிய மதமாகிய இந்து மதமாகும். இவ் இந்து மதம் தமிழ் நாட்டில் பரவிய காலம், ஆரியர்கள் நம் நாட்டில் வந்து குடியேறிய காலத்தைக் குறிப்பதாகும். ஆரியர்கள் நம் நாட்டுக்கு வருமுன், இந்து மதம் என்ற ஒரு மதம் இருந்ததாக எண்ணுவதற்கு எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை. ஆகையால், ஆரிய மதமாகிய இந்து மதத்தைத் தமிழ் மக்களுடைய மதம் என்று துணிந்து கூற ஆராய்ச்சித்துறை கண்ட அறிவுடைய எவரும் முன்வரமாட்டார்கள் என்பது எனது துணிபு. ஆரியர்கள் நம் நாட்டுக்கு வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, சிறந்த நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டு செம்மைநெறியில் ஒழுகிவந்த தமிழ் மக்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆரியர்களால் கொண்டுவந்து புகுத்தப்பட்ட இந்து மதம், தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பதை விளக்கிக்காட்டவே இச்சிறிய நூலை எழுதுகின்றோம்.

இப்போது இந்து மதம் என்று வைத்து வழங்கப்படும் மதத்திற்குப் பலர் பலவாறு பொருள் கூறுகின்றனர். 'இந்தியாவில் உள்ளவர்களின் மதமாதலால் இந்து மதம்' என்றும், 'சிந்து நதிக்கரையில் ஆரியர்கள் தங்கியிருந்ததால் அவர்கள் இந்துக்கள் என்றும், இந்து மதத்தினர் என்றும் அழைக்கப்பெற்றனர்' என்றும் பொருள் கூறுகின்றனர். மேற்சொன்ன இரண்டு காரணங்களும் பொய் என்பதை வலியுறுத்தி ஒரு உபநிடதம் அதன் உண்மைப் பொருளை விளக்கிக் காட்டுகின்றது. எப்படியெனில்,

"ஹிம்ஸாபாம் துயதேயஸ :
ஸ: ஹிந்துரி த்யபிதீயதே."

இதன் பொருள் :—'எவன் ஒருவன் துன்பம் என்பதில் நின்று அல்லற்படுகின்றானோ, அவன் இந்து என அழைக்கப்படுகிறான்

என்பதாகும். ஆரியர்கள் இருக்க இடமும், உடுக்கக் கூறையும், உண்ண உணவும் இன்றி, ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து துன்புற்றமையின், அவர்களை இந்துக்கள் என்று கூறும் உபநிடதக் கருத்தையே நாமும் உண்மையெனக் கொள்ளல் வேண்டும். அற்றன்று, ஆரியரல்லாத தமிழர்களை இந்துக்கள் என்று அழைப்பது பொருந்தாதோ வெனக் கடாவுவார்க்குப் பொருந்தாதென்றே கூறுவோம். ஏனெனில், தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த வகையறியாது ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து துன்புற்ற செய்தி, எந்த வரலாற்று நூலிலும் காணப்படவில்லையாதலால் என்க. மற்று, ஆரியர் அல்லற்பட்டு அலைந்து திரிந்து துன்புற்றமைக்குச் சான்றுகள் பல உள. விரிவஞ்சி ஒன்றிரண்டை மட்டும் இங்கெடுத்துக் காட்டுதும். ஆரியர்களின் முதல் நூலாகிய இருக்கு வேத முதல் மண்டிலத்தில் உள்ள 42-ம் பதிகத்தில், ஆரியர்கள் தங்கள் தலைவனுன இந்திரனை நோக்கிப் பின்வருமாறு வேண்டிக்கொள்கிறார்கள்.

1. "யாங்கள் செல்வத்தை எளிதில் அடையுமாறு செய்!"

2. "புல்லடர்ந்திருக்கின்ற மேய்ச்சல் நிலங்களுக்கு எம்மை வழிகாட்டிச் செலுத்து"

3. "எங்களுக்கு வயிறு நிறைய உணவு கொடு ; எங்கள் உடம்புக்கு உரம் ஏற்று!" என்றும்,

4. "சுவித்திராவின் இளங் கன்றே, ஓ மகவானே துக்கிரனுடைய வீடுகளினிடையே எங்களுக்கு நிலங்கிடைத்தல் வேண்டி நடந்த போரில் எங்களுக்கு உதவி செய்கின்றனை." (இருக்கு 1-ல் 33-ம் பதிகம்)

இவ் இருக்கு வேத உண்மைகள் ஆரியர்களின் மிடிப்பட்ட வாழ்க்கையைத் தெளிவாகக் காட்டுகின்றதாகையால், இந்துக்கள் என்று அழைப்பதற்கு ஆரிய மக்களே உரித்தானவர்கள் என்பது

தெற்றெனப் புலனாகின்றது. இனித், தமிழ் மக்கள் இருக்கு வேத காலத்திற்கு முன்பிருந்தே சிறந்த செல்வ வாழ்க்கையில் திளைத்திருந்தனர் என்பதற்கும் அவ் விருக்கு வேதமே சான்று பகர்கின்றது. அவற்றிலும் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுதும்.

1. "பொன்னணிகளாலும் மணிக்கலங்களாலும்
தம்மை ஒப்பனைசெய்து கொண்ட அவர்கள்
(தமிழர்கள்) இந் நிலத்தை மறைத்து ஓர்
ஆடை விரித்தார்கள்."

2. "இந்நிலத்தின் கடைக்கோடி வரையில்
ஊடுருவிப் பரவி நிற்கும் அவர்கள் (தமிழர்கள்)
தம் மந்திர ஆற்றலால் இந்திரனை வெல்ல
மாட்டாராயினர்."

3. "இந்திரன் தனது குலிசப்படையால் அவர்க
தமிழர்க) ளுடைய கோட்டைகளைப்பிளந்து
துகளாக்கினான்."

(இருக்கு 1-ல் 33-ம் பதிகம்)

4. "குயவனுடைய மனைவியர், இருவரும் பாவிலே
தலை முழுகுகின்றனர்! அவர்கள் சிபா
யாற்றின் ஆழத்தில் அமிழ்த்தப்
படுவாராக."

(இருக்கு 1-ல் 104-ம் பதிகம்)

இவ்விருக்கு வேத உண்மைகள் தமிழ் மக்களின் சிறந்த செல்வ வாழ்க்கையை நன்கு தெளிவுபடக் காட்டுவதோடு, தமிழர்கள் எல்லாரும் செய்தொழில் வேற்றுமையால் உயர்வு தாழ்வில்லாமல் ஒரே தன்மையாய்த் தங்கள் செல்வப் பேற்றினால் பெறக்கூடிய இன்பங்களை நுகர்ந்து வாழ்ந்தவர் என்பது, 'குயவனுடைய மனைவியர் பாவிலே தலை முழுகினார்கள்' என்பதால் தெரியக்

கிடக்கின்றது. ஏன்றிதுகாறும் கூறியதுகொண்டு தமிழர்கள் எக்காரணத்தைக்கொண்டும் இந்துக்கள் என்றே, இந்து மதத்தினர் என்றே அழைக்கப்படமாட்டார்கள் என்பது ஐயுறவின்றித் துணியப்படும். எனவே, இதுகாறும் தமிழர்களை இந்துக்கள் என்று அழைத்த பேதைமையினோர், இனி அவ்வாறு அழைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இனிப், பிழைக்க வழியின்றி இந் நாவலந் தீவில் வந்து குடியேறிய ஆரியர்கள், தமிழர்களின் நாகரிக வாழ்க்கையின் மேம்பாட்டையும், வறுமையும் கவலையுற்ற வாழ்க்கை முறைக் கேற்க, அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கும் பலவகைத் தொழின் முறைகளையும் கண்டு, தாமும் அவர்களைப் போலச் செல்வ வாழ்க் கையில் திளைத்திருக்க எண்ணினார்கள். ஆனால், அவர்கள் எந்தக் காலத்திலும் தாமாகவே பாடுபட்டுத் தம் வாழ்க்கைக்கு வகை தேடிக்கொள்ளாது ஊர் சுற்றித் திரியும் வழக்கத்தை மேற்கொண்டு கூத்தாடிப் பிழைத்தவர்களாகையால், அவர்களுக்குத் தன் மதிப்பு வாய்ந்த வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ள முடியாது போயிற்று. எனவே, அவர்கள் தாங்கள் பிழைப்பதற்கு ஏற்ற ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள். அவ்வழிதான் இன்றைக்கு நம் நாட்டில் 'இந்து மதம்' என்ற பெயரால் வைத்து வழங்கப்படும் பகுத்தறிவுக்கொவ்வாப் பழக்கமாம். அக்காலத்திலிருந்த தமிழ் வேந்தரும், தமிழ்ச் செல்வரும், தமிழ்ப் புலவரும் கள்ளங் கபடற்ற தூய உள்ளத்தினராய் இருந்தமையின், ஆரியருடைய கபட உரைகளைப் பொய்யெனத் தள்ளாது மெய்யெனக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆரியர்கள், அக்காலத்திலிருந்த தமிழ் வேந்தரை அணுகி, 'நாங்கள் வடக்கே பெருந்தொலைவில், அதாவது கடவுளர் வாழும் ஊரில் இருப்பவர்கள்; நாங்கள் உலகத்தைப் படைத்த பிரமாவின் முதற் பிள்ளைகளாய்,அவரின் தலையினின்றும் பிறந்தவர்கள்; ஆதலால் எங்களைப் 'பிராமணர்கள்' என்று அழைத்து வழிபடுவதும், எங்களை ஆதரிப்பதும், நிலம் புரக்கும் வேந்தர்க

ளாகிய நம்முடையவும் நம் குடிகளுடையவும் கடனும்' என்று அவர்களை மிக எளிதில் ஏமாற்றி. '**அன்பே கடவுள், 'அறிவே கடவுள்**' என்ற மெய்யுணர்வோடு இருந்த தமிழ்ப் பெருமக்களைத் தம் வயப்படுத்தி, மிக அருவருப்பான கடவுட் கொள்கைகளைத் தூய உள்ளம் படைத்த தமிழ் மக்களிடம் பதிய வைத்ததோடு, நூல் வடிவிலும் அவற்றைத் தொகுத்து வைத்துத் தம் பிழைப் பிற்கு வழி தேடிக்கொண்டார்கள்.

இனி ஆரியர்கள் தங்கள் பிழைப்புக்கு வழிகோலிய திட்டங்களை நிலைபெறச் செய்வதற்காக, உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இன்ப விருப்பமும் துன்ப வெறுப்புமே இயற்கை யாகக் காணப்படுகின்றன. இவ்வுலக இன்பங்கள் எல்லாம் நிலையில்லாத சிற்றின்பமாகவே இருக்கின்றன. அதனாலேயே அறிவுடையவர்கள் பேரின்பத்தை யடைய முயலுகிறார்கள். அவ்வாறு பேரின்பத்தையடைய அறிவுடையோர் கொண் டொழுகும் வழியே '**இந்து மதம்**' என்று சொல்லப்படும். என்று கூறியதோடு, அதற்கேற்கப் பல கட்டுக் கதைகளையும் எழுதி இந்து மத நூல்கள் பலவற்றை உண்டாக்கி, அவை தம்மை எல்லாம் நம்பும்படியுஞ் செய்து வைத்தனர். இந்து மத நூல்கள் நவலும் கதைகள் ஒவ்வொன்றும் மக்களின் உள்ளம் கரையத்தக்கனவாயும், இரங்கத் தக்கனவாயும், வியக்கத்தக்கன வாயும், மக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டனவாயும் காணப்பட்டதால், தமிழ்மக்கள் அவற்றை மெய்யென நம்பியதோடு, அக்கதைகள் எல்லாம் கடவுளால் அருளிச்செய்யப்பட்டன வென்ற ஆரியர்களின் புளுகையும் அவர்கள் ஒப்புக்கொண்டு, ஆரியர்களுக்கு வேண்டிய உதவிகளெல்லாம் செய்து கொடுத்து அவர்களைத் தங்கள் குருமாராகவும் ஏற்றுக்கொண்டார்கள். பொய் மெய்களை ஆராய்ந்து உண்மை காணும் ஆராய்ச்சிக் காலமாகிய இவ்இருபதாம் நூற்றாண்டிலுங்கூட, நாங்கள் காசிக்குச் சென்று கங்கையிலாடி விசுவநாதரை நேரில் வழிபடக் கொடுத்து வைக்காவிட்டாலும், காசிக்குப் போய் வந்தவரை வழிபட்டால் அந்தப் பலன் நமக்கும்

கிடைக்கும்' என்று அவர் காலடியில் விழுந்து வணங்கித் திருநீறு வாங்கி அணிந்து மகிழும் மக்கட் கூட்டம் இருக்கின்றனர் என்றால், அக்காலத்திருந்த தமிழ் மக்கள் ஆரியர்களைக் குருமாராகக்கொண்டு அவர்கள் கூறியதை எல்லாம் மெய்யென நம்பி வழிபட்டது ஒரு வியப்பல்ல. இது நிற்க,

மேற்சொன்ன இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய சைவமதக் குரவர் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசர் தாம் கடவுளை நேரிற் காண்பதற்காகக், கடவுள் வடக்கே பெருந் தொலைவில் இருப்பதாக நம்பிக் காலுந் தலையுந் தேய நடந்தும், உடம்பால் உருண்டும் பின் அசைய முடியாது களைப்புற்றுக் கிடந்தபோது, அங்கொருவர் தோன்றி அவரைத் தேற்றிப் பக்கத்திலிருந்த ஒரு குளத்தைக் காண்பித்து அதில் மூழ்கித் திருவையாற்றில் உள்ள குளத்தில் எழுந்து அங்கு கடவுளைக் கண்டு மகிழும்படி கூறிய தாகவும், அங்ஙனமே திருநாவுக்கரசரும் அக்குளத்தில் மூழ்கி 2500 கல் தொலைவுக்கு இப்பாலுள்ள திருவையாற்றுக் குளத்தில் தோன்றிக் கடவுளைக் கண்டு,

"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடா மலையாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்"

என்ற இத் தேவாரப் பதிகத்தையும் பாடியதாகவும் கூறப் படும் பெரிய புராணக் கதையை நம்பாத சைவமதத் தமிழ் மக்கள் எவரும் இல்லை யென்று துணிந்து கூறக்கூடிய இக்கா லத்தை நோக்கும் போது, மூவாயிரம் நாலாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட அக்காலத் தமிழ் மக்கள் ஆரியர் வலையிற் சிக்குண்டு இந்து மதத்திற்கு அடிமையானது ஒரு வியப்பல்ல.

இத்தேவாரத்தில், திருநாவுக்கரசர் தாம் தம்முடைய காலடி நிலத்திற் படாமலே கேதாரம் என்னும் இடத்திலிருந்து திருவையாற்றுக்கு வந்ததாகக் கூறுகிருர். கேதாரத்திற்கும் திருவையாற்றுக்கும் இடையேயுள்ள வழி ஏறக்குறைய 2,500 கல் தொலைவு இருக்குமென்று மேலே கூறினேமல்லவா. இவ்வளவு தொலைவை அவர் தம்முடைய சுவடு நிலத்திற் படாமல் எப்படி வந்தார் என்பது தெரியவில்லை. ஒருவேளை நீருள் மூழ்கிய படியே காற்சுவடு நிலத்திற்படாமல் வந்தார் என்ருல், அத்தகைய ஒரு நீர்த்தொடர் கேதாரத்திற்கும் திருவையாற்றுக்கும் இடையே இருக்கிறதா என்பதை அறிய நிலநூல் ஆராய்ச்சி வல்லாருக்கு விட்டுவிட்டாலும், 2,500 கல் தொலைவிற்குத் தொடர்பாக உள்ள நீர்ப்பரப்பை ஒருவன் எங்ஙனம் ஊடுருவி வர முடியுமென்பதை யாவது, அக்கதையை நம்பும் அன்பர்கள் ஆராய்ந்து பாராமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதும், இரங்கத்தக்கது மாகவே இருக்கிறது.

இனி, அக்கதையில் தமிழ் மக்கள் கருத்தூன்றிப் பார்க்க வேண்டிய தொன்றுண்டு. அதாவது திருநாவுக்கரசர் அசைய முடியாது களைப்புற்றுக் கிடந்த இடத்திற்கு வந்து அவருடன் உரையாடியவர் திருநாவுக்கரசரை நோக்கி, "நீர் உமது உடம்பிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத் தோடும் இந்தக்கொடிய காட்டில் எதன் பொருட்டு வந்தீர்" என்று வினவியதாகவும், திருநாவுக்கரசர் "நமது கடவுளாகிய சிவபெருமான் வடகைலேயிலே பார்வதி அம்மையாரோடு வீற்றிருக்கும் காட்சியைக்காண விரும்பிவந்தேன்" என்று விடைபகர்ந்ததாகவும், அதற்கு அவர் "தேவர்களாலும் அடையப்படுவதற்கு அரியதாகிய திருக்கைலாய மலையை மனிதர்களால் அடையப்படுதற்கு எளிதா! நீர் இந்தக் கொடுஞ் சுரத்தில் வந்து என் செய்தீர்! இனித் திரும்பி விடுதலே நலம்" என்று கூறியதாகவும், திருநாவுக்கரசர் "திருக் கைலாய மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைக் கண்டன்றித்

திரும்பேன்" என்று மறுத்ததாகவும், திருநாவுக்கரசருடைய துணிவைக்கண்ட அவர் மறைந்து நின்று, "நாவுக்கரசனே, எழுந்திரு" என்று கூறியதாகவும், உடனே திருநாவுக்கரசர் அழிந்த உறுப்புக்க ளெல்லாம் முன்போல நிரம்பப்பெற்று அழகிய வடிவோடும் எழுந்து, "சுவாமி, தேவரீர் திருக்கைலாய மலையில் எழுந்தருளி யிருக்கின்ற வடித்தைக் கண்டு வணங்க அருள் செய்யும்" என்று வேண்டிக்கொண்டதாகவும், அதற்கு அவர், "நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை அடைந்து, நம்மைக் கைலாய மலையில் வீற்றிருந்தபடி அந்த இடத்திலே கண்டு வணங்கு" என்று கூறியதாகவும், பெரிய புராணத்தில் காணப்படுகின்றது. திருநாவுக்கரசரின் கதையின் பிற் பகுதி யாகிய இந்த இடம் தான் பெரிதும் ஆராய்ச்சிக்குரியதாய் இருக்கிறது.

இந்து மதத்தின் ஒருபிரிவாகிய சைவமதக் குரவர் நால்வருள் **திருநாவுக்கரசர் தமிழர்** என்பதும், **திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் பார்ப்பனர்** என்பதும் நினைவில் வைக்கப்பட்டு, நாம் கூறும் உண்மைகளை ஆராய வேண்டியது தமிழ் மக்கள் கடனாகும். திருநாவுக்கரசர் காலம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாய் இருத்தல் வேண்டுமெனபது ஆராய்ச்சியாற் புலனாகின்றது ஆரியர்கள் தமிழ் நாட்டில் வந்து நிலை பெற்ற காலம் 'இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டதாய் இருத்தல் வேண்டுமென்பதும் ஆராய்ச்சியாளர் கண்ட முடிபாகும். எனவே, திருநாவுக்கரசர் தோன்றிய காலம் ஆரியமதமாகிய இந்து மதம் தமிழ் நாட்டில் வேருன்றி நிலைபெற்ற காலமாகும். அக்காலத்தில் பிறந்த தமிழ் மகனாகிய திருநாவுக்கரசரும் இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய சைவமதக் கொள்கையையே பெரிதும் பின்பற்றி ஒழுகி வந்தனராயினும், அவர் இளமையிலேயே கல்வி பயின்று அறிவு நிரம்பப் பெற்று இருந்தாராகலின், அவர் ஆரிய மதமாகிய சைவமதத்தில்

உண்மை எதுவும் இல்லை என்றும், அது ஆரியர்களின் பிழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பொய்மதம் என்றுங் கண்டு, அதனை வெறுத்துச் சமண மதத்தைத் தழுவி அம்மத நூல்களிலே பெரும் புலமை வாய்ந்து சமணர்களிற் றலைசிறந்து விளங்கினர். திருநாவுக்கரசரின் அறிவு நுட்பத்தையும், அவர் சைவமதத்தை வெறுத்துச் சமண மதத்தைத் தழுவியதையுங்கண்ட இந்து மதப் பார்ப்பனர், தங்கள் பிழைப்புக்கு மண்போட ஒரு தமிழன் தோன்றி விட்டானே. இவனை எப்படியாவது நம் வயப்படுத்த வேண்டும்; இல்லையேல் இவனைத் தொலைத்து விடவேண்டும் என்று கருதியவர்களாய்ப் பல சூழ்ச்சிகள் செய்து மீண்டும் அவர் சைவமதத்தைத் தழுவும்படி செய்தார்கள்.

ஆயினும், நமது தமிழ் வீரனாகிய திருநாவுக்கரசர் ஆரியர்களின் கொடுமைக்கஞ்சிச் சைவமதத்தில் இருப்பதாகக் காட்டிக்கொண்டாரே யொழிய உண்மையிலே அவருக்குச் சைவமதத்தில் பற்றுண்டாகவில்லை. இதனை அறிந்த ஆரியர்கள் தம் மரபிற் பிறந்த பார்ப்பனச் சிறுவனாகிய திருஞான சம்பந்தர் என்பவர் சீர்காழியில் இருக்கிறார் என்றும், அவர் தமது மூன்றாம் ஆண்டிலேயே சிவபெருமானை நேரிற் கண்டு அவரின் மனைவியாராகிய உமாதேவியாரின் முலைப்பாலை உண்டு அருள் விளையாட்டுப் புரிந்து கொண்டு இருக்கிறாரென்றும், அவரைப்பற்றி வானமளாவப் புகழ்ந்து கூறினார்கள். இதனைக் கேட்ட திருநாவுக்கரசருக்கு அவரைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுண்டாகிச் சீர்காழிக்குச் சென்று அவரைக் கண்டார். திருஞானசம்பந்தர் ஆண்டில் சிறியராய் இருந்தபோதிலும், அவருக்கு ஆரியக் குறும்பு மட்டும் இல்லாமற் போகவில்லை. அவர் திருநாவுக்கரசரைக் கண்டதும் அவரை நோக்கி, **"அப்பரே உம்முடைய சுவாமியைப் பாடும்"** என்று கூறினாராம். இதைக்கொண்டு நாம் அறியக் கிடப்பது என்னவென்றால், திருஞானசம்பந்தராகிய பார்ப்பனனுடைய கடவுள் வேறென்பதும், தமிழனாகிய திருநாவுச்

காசருடைய கடவுள் வேறென்பதுமேயாம். அற்றேல், '**உம்முடைய கடவுள்**' '**நம்முடைய கடவுள்**' என்ற பிரிவினை எதற்காக அந்த இடத்தில் எழுந்ததென்பதனைத் தமிழ் மக்கள் ஊன்றிப் பார்த்தல் வேண்டும் '**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**' என்பதை உள்ளபடியே நம்புந் தமிழ் மக்கள் நாம் கூறும் இவ்வுண்மையை ஒருபோதும் மறுக்க மாட்டார்கள் என்பது எனது துணிபு. திருநாவுக்கரசர் பல நாட்கள் திருஞானசம்பந்தர் கூடவே இருந்து, அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவருடன் சென்று, இந்து மதமாகிய சைவமதத்தில் ஏதாவது உண்மை இருக்கிறதா வென்று அறிய முயன்றார். ஆனால், அவர் திருஞான சம்பந்தரின் பல்லக்கைச் சுமந்ததைத் தவிர வேறுபயன் ஒன்றும் அடையவில்லை. பார்ப்பனக் கும்பலில் சேர்ந்து சென்ற தமிழனாகிய திருநாவுக்கரசர், அவர்கள் இட்ட பணியாகிய பல்லக்குச் சுமத்தல் போன்ற ஏவல் தொழிலையன்றி வேறென்ன எதிர்பார்க்க முடியும்!

எனவே, அவர் திருஞானசம்பந்தரை விட்டுப் பிரிந்து தனியாகப் பல கோயில்கட்குச் சென்று அங்கங்கே நிகழும் செயல்களை நேரில் பார்த்து வந்தார். பல இடங்களில் அறிவுக்குப் பொருந்தாத செயல்களைப் பார்ப்பனர் செய்து வருதல் கண்டு அவற்றைக் கண்டித்து, அப்பார்ப்பனர்களைத் திருத்த முயன்றார். ஆனால், அவர் அடைந்த பயன் என்ன? **திருத்தூங்கானைமாடம்** என்னும் கோயிலுக்கு அவர் சென்றிருந்தபோது, அக்கோயிலினுள்ள பார்ப்பனர்கள் புரியும் அடாத செயல்களைக் கண்டு, அவர்களைத் தம் அறிவுச் சுடர் கொண்டு திருத்த முயன்றார். அவர் இங்ஙனம் கூறியதைக் கண்ட அக்கோயிற் பார்ப்பனர்கள் வெகுண்டு 'ஒரு தமிழனாகிய சூத்திரப்பயலா எமக்கு அறிவு புகட்ட வருவது!' என்று சீற்றங்கொண்டவர்களாய் அக்கோயிலிற் கிடந்த ஒரு சூலாயுதத்தை எடுத்து நெருப்பில் நன்றாகப் பழுக்கக் காய்ச்சித் திருநாவுக்கரசருடைய தோளிலே சுட்டார்கள். அதனையும் அவர்

பொறுத்துக்கொண்டு, இன்னும் பார்ப்பனர் செய்யுங் கொடுமைகளைப் பார்த்தறிய விரும்பிப் பின்னும் பல கோயில்களுக்குச் சென்றார்.

திருச்சத்திமுற்றம் என்னுங் கோயிலை அவர் அடைந்து பார்த்தபோது: அங்கும் பார்ப்பனர் பல அடாத செயல்களைச் செய்வது கண்டு அவர்களைக் கண்டித்தார். ஆயினும், அப்பார்ப்பனர்கள் அவருக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணினார்களாயினும், அவர்களுக்கு அவ்வூரில் போதிய செல்வாக்கு இல்லாமையினாலோ, அல்லது வேறு காரணத்தாலோ அவரை ஒன்றும் செய்யாது, 'நீ நல்லூருக்கு வா' பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி விட்டு விட்டார்கள். பின் அவர் திரு நல்லூர் என்னுங் கோயிலை அடைந்ததும், அங்கே அவரை நன்றாக நையப்புடைத்துத், தலையிலும் பிற இடங்களிலும் உதைத்து விரட்டி விட்டார்கள். இக்கொடுமைகளைக் கண்டு மனம் பொறாத நமது திருநாவுக்கரசர் பின்வரும் பாடலைப் பாடி வருந்தியிருக்கிறார். தமிழ் மக்கள் இப்பாடலிற் பொதிந்துள்ள கருத்துக்களைப் பரபரப்பின்றியே பகுத்தறிவோடு நன்றாக ஊன்றிப் படித்து, அக்காலத்து ஆரியர்களுடைய கொடுமையை உணர்ந்துகொள்ள விரும்புகிறேன். அப்பாடல் வருமாறு:—

"நினைந்துருகு மடியாரை நைய வைத்தார்
[நில்லாமே தீவினைகணீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
[செழுமதி யின்றளிர் வைத்தார் சிறந்து வானோர்,
இனந்துருவி மணிமகுடத்தேறத் துற்ற
[னமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி,,
னைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூ ரெம்பெருமானார் நல்லவாறே'

இப்பாடலில் தாம் ஆரியர்களிடம் பட்ட துன்பத்தைக் கேட்போர் மனங்கரையுமாறு எவ்வளவு நொந்து பாடியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்! ஒருவர் செய்யும் அடாத செயல்களைக் கண்டு, அவர் அங்ஙனம் செய்வதை நினைந்து உருகி வருந்தும் ஒருவனை நையப் புடைக்கின்றனரே! என்று நம் நாவுக்கரசர் எவ்வளவு வருத்தத்தோடு பாடியிருக்கின்றார் என்பதை ஊன்றிப் பார்க்கும் எந்தத் தமிழனும் ஆரியப் பார்ப்பனருடைய கொடுமையினின்றும் விடுபடாமல் இருக்கமாட்டான். இன்னும் அப்பாடலில், வானோர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் ஆரியப் பார்ப்பனர், கடவுள் தங்களுடைய இனத்தவன் என்றெண்ணும் இறுமாப்பினாலே, கடவுளுடைய மணி முடியில் அணியக்கூடிய தேன் நிறைந்த மலர் மாலைகளைத் தாம் அணிந்து கொண்டு, அம்மலர்கள் அவர்கள் காலிற்பட்டு மிதி படுவதையும் பாராது, 'நம் தலையில் உதைக்கின்றார்களே! இச்செயல் இருந்தவாறு மிக நன்று நன்று! என்று எவ்வளவு கனிந்து பாடி முறையிட்டுள்ளார் என்பதையும் தமிழ் மக்கள் நன்கெண்ணிப் பார்க்க விரும்புகின்றேன்.

இனித், திருநாவுக்கரசர் ஒரு தமிழனாய்ப் பிறந்த காரணத்தால், அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்திருந்தமையையும் நோக்காது, அவரைக் கோயிற் புறங்களில் உள்ள புற் பூண்டுகளைப் பிடுங்குவதும், குப்பைகளை அப்புறப்படுத்துவதுமான ஏவல் தொண்டுகளையே செய்யும்படி ஏவித் துன்புறுத்தினார்கள். திருநாவுக்கரசர், ஆரியர்கள் கட்டிவைத்த இந்து மத நூற் கொள்கைகளை நம்பியோ, அல்லது ஆரியர்கள் செய்யும் சூழ்ச்சிகளை அறிவதற்கு அவர்கள் சொல்லும் வழி நடந்தால் தான் அறிய முடியுமென்று கருதியோ, அவர்கள் இட்ட பணியை மேற்கொண்டு செய்துவந்தார். **பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்''** என்ற தமிழர் நெறியை நன்குணர்ந்தவராதலால், திருநாவுக்கரசருக்குத் தம்

தொழிலில் உயர்வு தாழ்வு காண முடியவில்லை. அன்றியும், பிறப் பளவிற் கீழோராகக் கருதப்படுபவர். அறிவு குணம் முதலிய வற்றில் உயர்ந்தோராயின் அவரே மேலோராவர் என்பதும், பிறப்பளவில் தம்மை மேலோராகக் கருதியிருப்பவர் அறிவு குணம் முதலியவற்றில் இழிந்தவராயின், அவர் மேலோராதல் எவ்வாற்றானும் முடியாதென்பதும், தமிழர் கண்ட உண்மைக ளாதலால், நமது திருநாவுக்கரசர் தீயது வந்ததென்று உளங் கலங்காதும், நல்லது வந்ததென்று உளம் மகிழாதும் உயிர் வாழ் வதன் பயன் உண்மை காணுதலே என்ற முடிவோடு இருந்த மையால், ஆரியர் செய்த துன்பங்களை அவர் பொருட்படுத்தவில்லை.

இனித், திருநாவுக்கரசர் கல்வியறிவில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததைக் கண்ட ஆரியப் பார்ப்பனர், தங்களின் நிலையான பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ள வேண்டி, அவரைப் பல கோயில் கட்கு அழைத்துச் சென்று, அக் கோயில்களில் உள்ள கடவுளரின் பேரில் பல பதிகங்கள் பாடும்படியும் கட்டாயப் படுத்தியிருக்கின் றனர். **திருமறைக்காடு, வாய்மூர், திருப்பைஞ்ஞீலி, திருப் புகலூர்** முதலிய ஊர்களிலுள்ள கோயில்களிற் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்கள் ஆரியப் பார்ப்பனரின் கட்டாயத்தின் பேரில் பாடப்பட்டன என்பதற்குச் சான்றுகள் காணக்கிடக்கின்றன. தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற கோயில்களுக்குத் தனி மதிப்பும் செல்வாக்கும் உண்டென்பதை நன்கறிந்தே ஆரியர்கள் அங்ஙனம் 'செய்வித்தார்கள். இன்றுங்கூடப், பாடல் பெற்ற கோயில்களுக்கு இருக்கும் மதிப்பும், அவற்றிற்கு வரும் வரும் படியும், அக்கோயில்களைத் தங்கள் பிழைப்புக்கு ஆதாரமாக வைத்து வாழும் பார்ப்பனர் தொகை மிகுதியும், பாடல் பெறாத மற்றக் கோயில்களிற் காண முடியாதென்பதை நாம் பார்க்கின் றோமல்லவா!

இனித், திருநாவுக்கரசரைச் சில கோயில்களில் நுழைய விடாது, ஆரியப் பார்ப்பனர் தடுத்ததாகவுந் தெரியவருகிறது

திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் இருந்த காலத்தில், ஒரு நாள் இராத்திரி, ஒரு பார்ப்பனர் அவரை அணுகி "நீ திருவாய் மூருக்கு வா" என்று சொல்ல, அதைக் கேட்ட நாவுக்கரசர்

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினர்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனர்
அங்கே வாவென்று போனர் அதென் கொலோ."

என்ற பாடலைப்பாடி, நான் இருக்குமிடத்தைத் தேடிவந்து என்னை அங்கே வருமாறு பணிந்துப் போனதன் காரணம் யாதோ" அங்கு சென்ருல் என்ன நிகழுமோ' என்றஞ்சியவராய், அவ்விடத்தி னின்றும் புறப்பட்டுத் திருவாய் மூரைச் சென்றடைந்தார். அங்குள்ள கோயிற் பார்ப்பனர்கள் அவரைக் கோயிலுள் நுழைய விடாது தடுத்துவிட்டார்கள். அப்போது சைவமதக் குரவருள் இருவரான பார்ப்பனத் திருஞான சம்பந்தரும் அங்கு வந்து சேர்ந் தார். அவரைக் கண்டதும் அக்கோயிற் பார்ப்பனர்கள் உடனே கோயிற் கதவைத் திறந்து திருஞானசம்பந்தரை மட்டும் கோயிலுக் குட் போகவிட்டார்கள். அவர் கோயிலுக்குட் சென்று கடவுளை வணங்கி வெளியே வந்தபோது, திருநாவுக்கரசர் வெளியே நிற் பதையும், அவரை அக்கோயிற் பார்ப்பனர்கள் உள்ளே போக விடாது தடுத்திருத்தலையும் அறிந்து, அவரை அந்த இடத்தில் நின்றபடியே கடவுளை வணங்கும்படி சொல்லி, "நீ இங்கிருந்து கொண்டு கடவுளைப் பார்க்கும்போது அவரிடத்திலுள்ள பொருள் களில் உனக்கு என்னென்ன தெரிகின்றன ? அவற்றைச் சொல் என்று திருஞானசம்பந்தர் கேட்டதற்கு, நாவுக்கரசர்

" பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன், மொய்த்த பூத
மாடன் முழவ மதிரக் கண்டே னங்கை
யனல் கண்டேன் கங்கையாளைக்

கோடலரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடற் றலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளை நான்கண்ட வாறே''

என்ற பாடலைப்பாடித் தாம் அக்கடவுளிடத்துக் கண்ட காட்சிகளை விளக்கி, 'நான் வெளியே நின்று கொண்டு கண்டவாறே'' இப்படி,' நீர் உள்ளே சென்று கண்டவாறு எப்படியோ? என்று திருஞான சம்பந்தர் குத்தலாகக் கேட்டதற்கு நாவுக்கரசரும் குத்தலாக விடைபகர்ந்த நயத்தைத் தமிழ் மக்கள் அறிந்து சுவைக்கும் பொருட்டே அப்பாடலை இங்கே பொறித்தோம். மற்று அப்பாடலின் மக்களின் அறிவு வளர்ச்சிக்கான நல்லுரைகள் யாதாயினும் இருக்கிறதாக எண்ணி, அப்பாடலை இங்கெடுத்துக் காட்டினேம் என்று எவரும் கருதிவிடலாகாது. ஆனல், **ஆரியர்கள் இந்துமதத்தின் பேரால் தமிழர்களை எவ்வளவு இழிவு படுத்தினர்கள்** என்பது மட்டும் இத்தகைய பாடல்களினல் தெளிவாகின்றது.

இனி, வேதாரணியம் என்று சொல்லப்படும் மறைக் காடு என்ற ஊரிலுள்ள கோயில், வேதங்களால் அருச்சிக்கப் பட்டு நீண்ட காலமாகத் திறக்க முடியாமல் அடைக்கப் பெற்றிருத்தலை அறிந்த திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் அங்கு சென்று, அடைப்பட்டிருந்த கதவு முன்போலத் திறக்கவும் மூடவுமாகப் பாடல்கள் பாடினர்கள் என்று சொல்லப்படும் ஒரு நிகழ்ச்சியும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றது. வேதங்கள் கடவுளை அருச்சித்ததைப் பற்றியும், பாடல்களைக் கேட்டவுடன் கதவு திறந்ததும் மூடியதுமான நிகழ்ச்சிகளைப் பற்றியும், நாம் இங்கு ஆராய்ந்து முடிவு செய்யாவிட்டாலும், பார்ப்பனருக்கும் தமிழருக்கும் இடையேயுள்ள உயர்வு தாழ்வுகள் அக்காலத்தில் எவ்வளவு மிகுதியாகக் காணப்பட்டன என்பதை மட்டும், இங்கு எடுத்துக் காட்டித் தமிழ் மக்கள் இந்து மதத்தைக் கட்டியழுவதால் ஏற்படும் இழிவை விளக்குவது இன்றியமையாததாய் இருக்கின்றது.

பார்ப்பனச் சிறுவனுகிய திருஞானசம்பந்தர் தாம் முதலில் பாடினுல் கதவு திறக்குமோ, திறக்காதோ என்ற ஐயம் கொண்டவராய்த் திருநாவுக்கரசரை நோக்கி, 'நீர் இக்கதவு திறக்கப் பாடும்' என்று கேட்டுக்கொள்ள, நாவுக்கரசர், **பண்ணினேர் மொழியாள்,** என்று அடியெடுத்து ஒன்பது பாடல்கள் பாடியும் கதவு திறக்கப்படாதது கண்டு, **'இரக்கமொன்றிலீர்'** என்று அடியெடுத்துப் பத்தாவது பாடலேச் சிறிது கடுமையாகப் பாடியவுடன் கதவு திறந்ததாகவும், பின் கதவு அடைபடும் பொருட்டுத் திருஞான சம்பந்தர் **'சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்'** என்பதை முதலடியாகக் கொண்டு ஒரு பாட்டுப் பாடிய வுடனே கதவு அடைபட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இங்கேதான் தமிழ் மக்கள் தங்கள் பகுத்தறிவை நன்கு பயன்படுத்தி ஊன்றிப் பார்க்க வேண்டிய பார்ப்பனச் சூழ்ச்சி நிறைந்து கிடக்கிறது. பூட்டப் பட்டிருக்கும் ஒரு கதவைத் திறக்கவேண்டுமானுல், அதற்குரிய திறவுகோல் கொண்டு திறப்பது வழக்கமாயிருக்க, இங்கே பூட்டப் பெற்ற கதவு பாட்டைப் பெற்றவுடன் திறந்ததாகச் சொல்லப் படுகிறது. கதவு பூட்டினுல் திறந்தாலும் அல்லது பாட்டினுல் திறந்தாலும் அதைப் பற்றி நமக்குக் கவலேயில்லே. **"யார்வைத்த தீயினுலோ வீடு வெந்தது"** மெய் என்பதுபோல, எப்படியோ கதவு திறக்கப்பட்டது. ஆனுல், திறந்த கதவை மீண்டும் அடைப்பதற்குப் பாட்டுப்பாட வேண்டுமோ என்பதுதான் இங்கு ஆராய்ந்து பார்க்கவேண்டிய தாகும். எலும்பைப் பெண்ணுக உயிர்த்தெழச் செய்வதற்குப் பாடல் பாடிய திருஞானசம்பந்தர், அப்பெண் இறக்குங் காலத்தில் வந்து பாட்டுப் பாடி இறக்கச் செய்தாரா ? இல்லே. அப்பெண் தானுகவே இறந்துவிட்டாள்.' இதை ஏன் இங்கெடுத்துக் காட்டுகிறேன் என்ருல், பாட்டினுல் திறக்கப்பட்ட கதவைப் பாட்டினுல் தான் அடைக்க முடியுமென்று கூக்குரலிட்டு எம் மீது சீற்றங்கொள்ள வருவாரைத் தடுத்து, அவர்களின் பகுத்தறிவுக்கு வேலே கொடுத்து உண்மையறியும்படி செய்வதற்காகவே யன்றி வேருென்றுக்குமாக வல்ல. ஆகையால், அன்பர்கள்

நாம் கூறுவதைக் குற்றமாகக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இனித், திருநாவுக்கரசர் பத்துப்பாடல்கள் பாடிய பின், திறந்த கதவு திருஞான சம்பந்தர் ஒரு பாடல்பாடியவுடன் அடைபட்ட காரணம் என்ன என்பதையாவது ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? கதவு நீண்டகாலமாகப் பூட்டப்பெற்றுத் திறவாமல் இருந்தபடியால், அது திறப்பதற்குப் பத்துப்பாடல்கள் பாடவேண்டியிருந்தது, ஆனல், திறந்த கதவை அடைப்பது எளிதாக முடியக்கூடிய தாகையால், அது ஒரு பாடல் பாடியவுடன் அடைபட்டது என்று பொருள் கொள்வது, அறிவுக்கும் கடவுட்டன்மைக்கும் பொருந்துவதாயில்லை. கடவுளுடைய ஆணையின் பேரில் அக்கதவு பூட்டப்பெற்றுப், பின் கடவுள் அருளைப் பெற்ற அடியார்களால் தான் அது திறக்கவும் அடைக்கவும் முடியுமென்று கடவுள் கட்டளையிட்டிருந்தால், பத்துப்பாடல்களால் திறக்கப்பட்ட கதவு அடைப்பதற்கும் பத்துப்பாடல்கள் பாடவேண்டுமன்றோ! அங்ஙனமல்லாமல் திறப்பதற்குமட்டும் பத்துப் பாடல்களும், அடைப்பதற்கு ஒருபாடலும் போதும் என்றால், அந்நிகழ்ச்சி அறிவுக்குப் பொருத்தமாகவும் இல்லை. கடவுளின் திருவிளையாட்டுக்கு ஏற்றதாகவுங் காணப்படவில்லை. கடவுளின் விருப்பம், பாடலால்தான் அக்கதவு திறக்கவும் அடைக்கவும்பட வேண்டுமென்றிருந்தால், திறப்பதை ஒரு வகையாகவும், அடைப்பதைப் பிறிதொரு வகையாகவும் நிகழத் தமது திருவிளையாடலைப் புரிந்திருப்பாரா? அது, விருப்பு வெறுப்பற்ற கடவுளின் தன்மைக்கு ஏற்றதாகுமா? அற்றன்று, கடவுள் எல்லாம் வல்லவர்; அவர் செய்வதெல்லாம் அருள்விளையாட்டே, அவருடைய செயல்களில் குற்றங் காணுவதுங் குறை கூறுவதும் மக்களாய்ப் பிறந்தார்க்கு அடாதசெயல்களாம் என்று சொன்னல், **"நெற்றிக் கண்ணைத் திறந்தாலுங் குற்றம் குற்றமே** என்று சொன்னதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கடவுளின் அருள் விளையாட்டால் அடைக்கப்பட்டிருந்த கதவை அக்கடவுளுடைய உடன்பாடு (**உத்தரவு**) பெறாமல் திறக்க

முயன்றது பெருங் குற்றமன்றோ ! அன்றியும், "எனது அடியார்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இங்கே வருகின்றார்கள், அவர்களைக்கொண்டு இதுகாறும் அடைபட்டுக் கிடக்கும் கதவைத் திறப்பியுங்கள்" என்று கடவுள் அவ்வூரிலுள்ள அடியார்கள் கனவிலாவது தோன்றிச் சொன்னாரா? இல்லையே! கடவுள் தமது அருள் விளையாட்டுக்களை மக்களின் கனவிற் றோன்றியும், பார்ப்பன வேடந்தாங்கியும் செய்ததாக இந்துமத நூல்கள் நுவல்கின்றனவே! இந்நிகழ்ச்சி ஏன் அங்ஙனம் நடைபெறவில்லை? என்பன போன்றவைகளை இத்தகைய கதைகளை அப்படியே நம்பி மகிழும் அன்பர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டாமா? எனவே, இனி அக் கதவு அடைக்கப்பட்டிருந்த காரணத்தையும், பின் திறக்கப்பட்ட நோக்கத்தையும் பற்றிய உண்மைகளை, நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

திருமறைக்காட்டில் உள்ள சைவமதக்கொள்கையோடு கூடிய அச்சிவன் கோயில் அடைபட்டிருந்ததற்குக் காரணம் இரண்டு சொல்லலாம். ஒன்று, அக்கோயில் மேற்பார்வையாளருக்கிடையோ அல்லது பூசாரிகளுக்கிடையேயோ, யாதாயினும் சச்சரவுகள் உண்டாகி அச்சச்சரவுகள் தீரும் வரையில் கோயிலைப் பூட்டி வைத்திருந்திருக்கலாம். மற்றொன்று, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலான சைவமதக் குரவர் காலம், சமணமதம் இந்நாவலந்தீவில் தலைசிறந்து விளங்கிய காலமாகும். எனவே, அக்காலத்திருந்த சமணர்கள் அக்கோயிலைத் தம் வயப்படுத்திச் சைவர்களைச் சிவ வழிபாடு செய்ய விடாது தடுத்துப் பூட்டி வைத்திருக்கலாம். நாம் இங்கு கூறிய இரண்டு காரணங்களில் முதலாவது காரணம் பொதுவாக நிகழக்கூடிய தென்பதையும், இரண்டாவது காரணம் சிறப்பாக அக் கால நிலையை யொட்டி நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதையும் காய்தல் உவத்தல் இன்றிய நடுவர் ஒப்புக்கொள்ள மறுக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

எனவே, சைவமதத் தலைவர்களான சம்பந்தரும், நாவுக்கரசரும் அங்கு சென்றபோது கோயில் அடைக்கப்பட்டிருத்தலைக்

கேள்விப்பட்டு, அதன் காரணத்தை வினவி, முதற்காரணமாயிருந்திருப்பின் அவர்களுக் கிடையே இருந்த சச்சரவுகளை நீக்கி வைத்துக் கோயிலைத் திறந்திருக்கக் கூடும். இரண்டாவது காரணமாய் இருந்திருப்பின், சமணர்களோடு மதப்போர் தொடுத்து அவர்களை வென்று கோயிலைத் திறந்திருக்கக் கூடும் ஆனால், **பழையாறை, மதுரை** முதலான ஊர்களில் சமணர்களோடு மதப்போர் தொடுத்து, அவர்களைக் கொன்றழித்துக் கோயில் திறந்த செய்தி, பெரிய புராணத்தில் வெளிப்படையாகக் காணக்கிடக்கும்போது, இவ்வூரிலும் மதப்போர் நிகழ்ந்து சமணர்களை அழித்துக் கோயில் திறக்கப்பட்டதாயின், பெரிய புராணம் பாடியவர் அந்நிகழ்ச்சியையும் குறிப்பிட்டிருக்க மாட்டாரா? 'நீர் கூறுவது பொய்யே யன்றி மெய்யல்ல' வென்று பதட்டப்பட்டுச் சீற்றங்கொள்வார் சிலர் இல்லாமொழியார் என்று கருதியே எவராலும் மறுக்க முடியாத காரணத்தை முதலிலே காட்டினோம். அதுவும் பொய்; ஓகோ! அழிந்தது இந்துமதம்! தொலைந்தது சைவம்! என்று ஏங்கித் தவிக்கும் என தருமைத் தமிழ் மக்களுக்கு இன்னொரு காரணமுங் கூறுகின்றேன், அதையாவது சிறிது **'ஆறுவது சின'**த்தை மேற்கொண்டு, அமைதி பெற்று ஆராய்ந்து உண்மை காண விரும்புகின்றேன்.

திருஞான சம்பந்தர் ஒரு பார்ப்பனர் என்பதும், திருநாவுக்கரசர் ஒரு தமிழன் என்பதும் யாவரும் அறிந்ததாகும். எனவே திருஞானசம்பந்தர் கதவு திறப்பதற்குத் தாம் முதலிற் பாடாது திருநாவுக்கரசரைப் பாடும்படி ஏவிய சூழ்ச்சியும், திருநாவுக்கரச, ஒன்பது பாடல்கள் பாடியும் கதவு திறக்கப்படாமல் பத்தாவது பாட்டில் திறந்ததாகத் திருநாவுக்கரசரை இழிவு படுத்தச் செய்த கபடமும்; திருஞான சம்பந்தர் ஒரு பாடல் பாடிய உடனே கதத அடைக்கப்பட்டதாக அவரைப் பெருமைப் படுத்தச் செய்தவிரகும், திறந்த கதவை அடைப்பதற்கும் பாடல் பாடியதாகப் பகுத்தறிவுக்குப் பொருந்தா முறையில் சொல்லித் திருநாவுக்கரசரால் திறக்கப்பட்டாலும், பின் திருஞான சம்பந்தர் பாடிய

தால் தான், கதவு திறக்கவும் அடைக்கவுமாக ஏற்பட்டதென்று கூறித் திருஞானசம்பந்தருக்குப் புகழ் தேடிய சூதும்; **சூத்திரர் ஆகிய தமிழனுக்குக் கடவுள் மிக அரிதில் தான் அருள் செய்வார்** என்பதைக் காட்ட அவர் பத்துப் பாடல்கள் பாடிய பின்னரே கதவு திறந்ததென்றும், **பிரம குலத்தவராகிய பார்ப்பனருக்குக் கடவுள்மிக எளிதில் அருள்செய்வார்** என்பதைக் காட்ட அவர் ஒரு பாடல் பாடியவுடனே கதவு அடைப்பட்டதென்றும், காட்டுவதற்குக் கட்டிவைத்த புனைவுக் கதையும் **ஆரியரை உயர்த்துவதற்காகவும், தமிழரைத் தாழ்த்துவதற்காகவுமே** பெரிய புராணக் கதையை இங்ஙனம் எழுதி வைத்தார்கள். அன்றியும், நாம் மேலே எடுத்துக் காட்டியபடி, கடவுளின் திருவருளினால் பாடப்பெற்ற பாடல்களினால் கதவு திறத்தலும் அடைத்தலும் ஆகிய வியத்தகு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்று புராணத்தில் எழுதி வைத்தாலொழியத் தமக்குப் பிழைக்க முடியாதென்பதை அறிந்தே பார்ப்பனர்கள் சேக்கிழாரைக் கொண்டு புராணம் எழுதி வைத்தார்கள் என்ற பிறிதொரு காரணமும் ஈண்டறியக் கிடக்கின்றது. என்றிதுகாறும் கூறியது கொண்டு ஆரியப் பார்ப்பனர் தமிழர்களைத் தாழ்வு படுத்தச் செய்த சூழ்ச்சிகளையும், அவர்கள் தங்கள் பிழைப்புக்கு வழிதேடிக் கொண்ட கபட முறைகளையும் தமிழ் மக்கள் ஓரளவு தெரிந்து கொள்ள முடியுமென்றே நம்புகிறேன்.

இனி, வடகைலையிலேயே சிவபெருமான் பார்வதி தேவியாரோடு வீற்றிருக்கின்றார் என்றும், அவ்விருவரையும் வேதங்களும் சிவாகமங்களும் இரு பக்கத்திலும் வாழ்த்தவும், தும்புரு நாரதரெனும் இருவரும் யாழ் வாசிக்கவும் பிரம விட்டுணுக்கள் இருவரும் ஆடையை ஒதுக்கி வாயைக், கையினாலே பொத்திக்கொண்டு, ஒதுங்கி நின்று தத்தங் குறைகளைச் சொல்லவும், பூதகணங்கள் கடைதோறும் காக்கவும், தேவர் சித்தர் அசுரர் சாரணர் காந்தருவர் கின்னரர் இயக்கர் விஞ்சையர் முதலாகிய கணத்தவர்கள் வழிபடவும், திருநந்தி தேவர் கையிலே பிரம்பைத்

தாங்கிக்கொண்டு பணி செய்யவுமாகிய காட்சிகளைக் காண முடியுமென்று சைவமத நூல்களும், ஆரியப் பார்ப்பனரும் நுவல்கின்ற உண்மை, ஆரியர் நம் நாட்டிற் குடியேறிய அக்காலந்தொட்டு இக்காலம் வரை பெரும்பான்மை மக்களால் நம்பப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

நம் திருநாவுக்கரசர் தமது இளம் பருவத்திலே கல்வியை முறையே பயின்று, சைவமத நூல்களை நன்காராய்ந்து அவற்றில் உண்மை எதுவும் இல்லை என்பதை அறிந்து, சைவ மதத்தை வெறுத்துச் சமண மதம் புகுந்து பின் ஆரியர் செய்த சூழ்ச்சியால் மீண்டும் சைவ மதத்தைத் தழுவி, அதில் அவர் அடைந்த துன்பங்களை மேலே எடுத்துக்காட்டினோமல்லவா! இனி அவருடைய கடைசி கால நிகழ்ச்சிகளையும் சுருக்கமாகக் கூறுகின்றோம். திருநாவுக்கரசர் சைவமத நூல்களும், பார்ப்பனர் எழுதியும், சொல்லியும் வைத்தபடி தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் எல்லாம் சுற்றிப் பார்த்தும் உண்மை ஒன்றுங் காண முடியாதவராய்ச் சலிப்புற்று, இனி வடகைலைக்காவது சென்று கடவுள் அங்கிருப்பதும் இல்லாததுமாகிய மெய்பொய்களை அறிய எண்ணங்கொண்டு, புறப்பட்டு மிக வருந்திச்சென்று, வடகைலையென்று சொல்லப்படும் அந்தக் கொடிய காட்டை அடைந்து அங்கொன்றும் காணப் பெருமல் பசியாலும் உடல் வலியாலும் களைப்புற்று ஓரிடத்தில் கிடந்தார்.

இஃதிவ்வாறிருக்க, இங்கேயுள்ள ஆரியப் பார்ப்பனர்கள், திருநாவுக்காசர் வடகைலை சென்றிருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு, ‘இனி நாம் பிழைப்பதற்கு வழியில்லை! வடகைலை சென்ற அந்தச் **சூத்திரப் பயல்** திரும்பி வந்து அங்கே கடவுளுமில்லைக் காண்பதற்குக் காட்டைத் தவிர வேறொன்றுமில்லை என்று சொன்னால் நாம் என்ன செய்வது! திருநாவுக்கரசன் ஓரளவுக்குப் படித்து அறிவு பெற்றிருக்கின்றானதலால், அவன் சொல்வதை இங்கேயுள்ள **சூத்திரப் பயல்கள் எல்லாரும்** நம்புவது திண்ணம்;

எனவே அவர்கள் எங்கள் பிழைப்புக்கு இடையூறு செய்வதும் திண்ணம். ஆகையால் நாம் முன் கூட்டியே எச்சரிக்கையாய் இருந்து அவ்விதம் ஒன்றும் நிகழவிடாது தடுத்து, நமது பிழைப்புக்கு அரண்செய்து கொள்ளவேண்டும்' என்றெண்ணி ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அதாவது, வடகைலை சென்றிருக்கும் திருநாவுக்கரசரைப் பின்தொடர்ந்து செல்லும்படி உடல் உரமும் மனஇறுக்கமும் பெற்ற ஆரியப் பார்ப்பனன் ஒருவனை அனுப்பி வைத்தார்கள். அங்ஙனம் சென்ற ஆரியப் பார்ப்பனன்தான், உடல் நலிந்து களைப்புற்றுக் கிடந்த வீரத் தமிழனாகிய திருநாவுக்கரசர் முன் தோன்றி, 'நீர் உமது உடம்பிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத் தோடும் இந்தக்கொடிய காட்டில் எதன் பொருட்டு வந்தீர்' என்று கேட்டவனாவனன், பின்னர் திருநாவுக்கரசர் தாம் கைலையைப் பார்த்தன்றித் திரும்புவதில்லை என்று சொன்ன உறுதியையும் வீரமொழிகளையும் கேட்ட அந்த இரக்கமற்ற பார்ப்பனன், இவனை 'இங்கே இப்படி விட்டு விட்டால் எப்படியும் நமக்குக் கேடுதேடுவான்' என்று முடிவு செய்து, அவரைத் தூக்கிக்கொண்டு போய் அக்காட்டிலுள்ள ஒரு பாழடைந்த குளத்தில் போட்டு அந்த வீரத் தமிழனாகிய திருநாவுக்கரசரின் உயிருக்கு முடிவு செய்து விட்டான். இந்து மதமெனும் பேய்கொண்ட பார்ப்பனர் செய்த கொடுமையை எண்ணிப்பாருங்கள், தமிழர்களே! இதற்காகக் கண்ணீர் விட்டுக் கலங்காதீர்கள்! இனிமேலாவது அவ்விந்து மதமெனுங் கொடியவலையிற் சிக்கி அறிவிழந்து மடிந்து போகாத வழியைத் தேடுங்கள் !

நான் இங்ஙனம் எழுதியதைக்கண்டு சில போலிச் சைவர்கள் இது பொய் என்று கூறலாம். ஆனால், நான் ஆதாரமில்லாமல் எழுதவில்லையாகையால், குறை கூறுவோரைக் கண்டஞ்சி நான் ஆராய்ந்து கண்ட முடிவை வெளியிடாமலிருக்க முடியவில்லை. இற்றைக்கு முந்நூற்றெழுபது ஆண்டுகட்கு முன் இத்தாலிய நகரத்திலே பிறந்த அறிவியற் புலவரான கலீலியோ

(Galileo) என்பவர் தமது ஆராய்ச்சியால், பகலவன் (சூரியன்) பூமியைச் சுற்றி வருகின்றதென்ற பொய்ம்மையை நீக்கிப்; பூமியும் மற்றக் கோள்களுமே பகலவனைச் சுற்றி வருகின்றன வென்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறியபோது, அவ்வூரிலுள்ள கிறித்தவ மதத் தலைவர்களும் மற்றவர்களும் சேர்ந்து, தங்கள் மதக்கோட்பாட்டுக்கு மாறான ஒன்றைக் கலீலியோ சொல்லி விட்டார் என்று அவரைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தியதும், பின்னர் அவர் கூறியதே உண்மையென்று அறிந்து அவரைப் போற்றியதுமான செய்திகள் உலகம் அறிந்ததாகையால், நான் கண்டறிந்த உண்மையைக் கண்டு, இப்போது குறை கூறுபவர் களைப்பற்றி நாமுங் குறைகூறாமல் இன்னும் அதன் உண்மைகளை நன்கு விளக்கி, அவற்றை மக்கள் அறியும் பெற்றியில் நமது முயற்சியையும் உழைப்பையும் பயன் படுத்துவோமாக.

இனி, நாம் மேற்கூறியவாறு திருநாவுக்கரசர் அவவெஞ் சுரக்காட்டிலுள்ள ஒருகுளத்தில் தள்ளப்பட்டு இறக்கவில்லை யென்றும், பெரிய புராணத்தில் சொல்லப்பட்டபடி, அக்குள த்தில் மூழ்கி 2500 கல் தொலைவுக்கு இப்பாலுள்ள திருவை யாற்றுக் குளத்தில் தோன்றிக் கடவுளைக் கண்டு, பின் அவரு டைய திருவடி நிழலை அடைந்தார் என்பதே மெய் என்றும் கூறுவாருரை பொய் என்பதை முன்னமே விளக்கிக் காட்டினும். இன்னும் ஐயுறுவார்க்குப் பின்னுஞ் சில மறுக்கமுடியாத சான்றுகள் காட்டி உண்மை உணரும்படி செய்வாம். நமது திருநாவுக்கரசர், ஏனைய சைவமதக் குரவர்களான திருஞானசம் பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரிலும் பார்க்க ஆண்டில் முதியவர் என்பது அவர் எண்பத்தொரு ஆண்டு உயிர் வாழ்ந்தவரென்றும், மற்றைய மூவரும் முறையே பதினாறு, பதினெட்டு, முப்பத்திரண்டு ஆண்டுகள் வரை தான் உயிர் வாழ்ந்திருந்தனர் என்றும் பெரிய புராணக் கதையால் அறியக் கிடக்கின்றது. ஆனல், அவர்களுடைய காலத்தை எல்லை வகுத்து

அதையே காரணமாகக்கொண்டு அவர்களிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது முறையல்லவென்று வைத்துக்கொண்டாலும், திருநாவுக்கரசர் அறிவாற்றலில் சிறந்து விளங்கினமையாலேயே அவருக்கு **"நாவுக்கு அரசன்"** என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பட்டது. அன்றியும் அவர் நீண்டகாலம் சைவமதக் கடவுளான சிவனுக்குப் பாடற்றொண்டும் உழவாரப் பணியாகிய கைத்தொண்டும் செய்திருக்கிருர். இவற்றையெல்லாம் எதற்காக இங்கு குறிப்பிடுகிறேன் என்ருல், ஆரியர்கள் மட்டுமல்ல, **ஆரியக் கடவுளானசிவ பெருமானும் தமிழர்களை எவ்வளவு இழிவுபடுத்தியிருக்கிருர்** என்பதை **'எங்கள் சைவம்,' 'எங்கள் சிவன்,'** என்று இந்துமதமாகிய சைவமதத்தையும் அம்மதக்கடவுளையும் நீர் வழிப்பட்ட புணைபோற் பின்பற்றிச்செல்பவர்களான நந் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகவேயொழிய வேருென்றுக்குமாக வல்லவாகையால், தமிழ் மக்கள் நான் கூறுவதை நன்கெண்ணிப் பார்த்து உண்மை அறிய விரும்புகின்றேன்.

பொதுவாக எல்லா மதநூல்களிலும் உயிர்கள் கடைசியாக இறைவனுடைய திருவடி நிழலைப்போய் அடைகின்றன; அல்லது மோட்சம் அடைகின்றன என்று சொல்லப்பட்டிருந்தாலும், சிறப்பாக இந்து மத நூல்களில் அது நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்துமத நூல்களிலுஞ் சிலவற்றில் மக்கட் பிறவியே மிக உயர்ந்ததென்றும், அப்பிறவியெடுத்துத்தான் இறைவனுடைய திருவடி நீழலை யடைய முடியுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும் வேறுசில இந்துமதநூல்களில், **காக்கை, கொக்கு, நாரை, சிலந்தி, செடி, மரம், நாய், பன்றி** முதலான பறவைகளுக்கும், மரங்களுக்கும், விலங்குகளுக்கும் இறைவன் தம்முடைய திருவடிநீழலை ஈந்ததாகச் சொல்லப்படுகின்றது. அன்றியும் **தந்தையைக் கொன்று, பெற்ற தாயைப் புணர்ந்தவனையும், கடவுள் தம்பால் சேர்த்துக்கொண்டதாகவும்** பின்னுஞ் சில சைவமத நூல்கள்

நுவல்கின்றன. ஆனுல், அத்தகைய அகண்டாகார சிவபோக மென்னும் பேரின்ப வெள்ளப் பெருங்கடவுளுக்கு நமது திருநா வுக்கரசரிடத்தில் மட்டும் யாது காரணம் பற்றியோ வெறுப்புண் டாகிப், பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்கும் அந்தச் சிவபோக வெள்ளத்தைப் புசித்து இன்புற விடாது தடுத்து விட்டார்.

ஆனுல், திருநாவுக்கரசரைப் போலவே, சைவமதக் குரவர் என்ற பட்டத்தைப் பெற்றவர்களான திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான மூன்று பார்ப்பனருக்கும் கடவுள் தம்முடைய திருவடி நீழலைக்கொடுத்து, அவர்கள், கரையிறந்த அருட் பெருங் கடலிலே அன்பு நதி ஈர்த்துச் செல்ல, மிதந்து போய்த், தெவிட்டுதலில்லாத அளவிறந்த சிவாநந்தத் தேனைப் பருகி மகிழ்ந்திருக்கும்படி அருள் செய்திருக்கிருர். அம்மூவரும் கடவுளுடைய திருவடி நீழலை யடைந்த வரலாறுகளையும் இங்கு சுருக்கமாகக் கூறுகின்றேன். திருஞானசம்பந்தர் என்னுஞ் சைவ மதக்குரவர், தம்முடைய பதினருவது ஆண்டிலே திருமணஞ் செய்து கொண்டு, தம்முடைய மனைவியையும், திருமணத்திற்கு வந்திருந்த உறவினர் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு நல்லூர்ப் பெருமணம் என்னும் ஊரின்கண் உள்ள கடவுளை வழிபடுவதற்குச்சென்றுர். அக்கோயிலிலுள்ள கடவுள் அங்கே ஒரு அனற்பிழம்பை உண்டாக்கி, "நீயும் உன் மனைவியும் உன்னு டைய திருமணத்தைக் காணவந்த எல்லாரும் இந்தச் சோதியி னுள்ளே வந்து நம்மை அடையுங்கள்" என்று அருளிச் செய்து, திருஞானசம்பந்தருக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் தம் முடைய திருவடி நீழலைக் கொடுத்தாரென்றும், சுந்தரர், திருவஞ் சைக்களமென்னும் ஊரில் சேரமான் என்னும் அரசனேடு இருந்தபோது, ஒரு நாள், கடவுள், பிரம விட்டுணுக்களையும், மற்றத் தம்முடைய வெள்ளி மன்றத்து உறுப்பினர்களையும்

அழைத்து, நீங்கள் போய் நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின் மேல் ஏற்றிக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டு அவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார் என்றும் மாணிக்கவாசகர், சிதம்பரத்தில் இருந்து கொண்டு திருக்கோவையார் என்னும் நூலைப் பாடச், செஞ்சடைக் கடவுளாகிய நடராசர் நேரில்வந்து, ஏடும்எழுத்தாணியுங்கொண்டு அப்பாடல்களை எழுதிக் கொண்டு மறைந்துபோய், அவ்வேட்டைக் கோயில் வாயிற் படியில் வைத்துப்போக, அதனைக் கண்டெடுத்த அக்கோயிற் பார்ப்பனர்கள் அவ்வேட்டிலுள்ள பாடல்களின் பொருளறியாது மாணிக்கவாசகரை, வினவ, அவர், "இதற்குப் பொருள் இது தான்" என்று அக்கோயிலுள்ளிருந்த நடராச வடிவத்தை (விக்கிரகத்தை)ச் சுட்டிக்காட்டி, அக்கோயிலுக்குள் புகுந்து மறைந்து கடவுளுடன் இரண்டறக் கலந்துவிட்டா ரென்றும் சொல்லப்படுகின்றது. இம்மூவரும் திருவடி நீழலடைந்த திருவிளையாடல்களைப் பற்றி' வேறொரு தனி நூல் எழுதுவோம். அந்த உண்மைகளை அங்கே கண்டு தெளிக.)

இனித், திருநாவுக்காசர், திருப்புகலூர் என்னும் ஊரில் இருந்த காலத்தில் இறந்துவிட்டார் என்று சொல்லப்படுவதைத் தவிர, மேலே சொல்லப்பட்ட பார்ப்பனர் மூவருக்கும் நடைபெற்ற புதுமைக் காட்சிகள் ஒன்றும் இவருக்கு நடந்ததாகக் கதையிற் கூறப்படவில்லை. எனவே, முன்னர் நாம் திருநாவுக்கரசர் எப்படி இறந்தார் என்று விளக்கிய உண்மை இதனால் நன்கு வலியுறுவதோடு, **சூத்திரனாகிய திருநாவுக்கரசருக்கும்** அவர் இனத்தவராகிய தமிழ் மக்களுக்கும் **கடவுட் பேறு இல்லை** என்பதும், பார்ப்பனர்களாகிய சுந்தரருக்கும், மாணிக்கவாசகருக்கும், சம்பந்தருக்கும், அவர் இனத்தார்க்கும் மட்டுமே கடவுட்பேறு உண்டென்பதும் இதனால் சிறிதும் ஐயுறவின்றித் துணியற்பாலதாயிருக்கின்றது.

எனவே, இல்வாறு ஒருவருக்கொரு (நீதி) முறை வழங்குகின்ற இந்துமதக் கடவுளேயும், அக்கடவுளேத் தலைவனுகக்கொண்டுள்ள இந்து மதத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளலாமா என்பதைை அன்பர்கள் ஆழ்ந்தெண்ணிப் பார்த்து முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு, இந்தகைய உண்மைகளேத் தமிழ் மக்கள் அறிந்துகொள்ளும்படி எடுத்துச்சொல்லும் என் போன்றவர்களேக் குறைகூறுவோர் உண்மையிலேயே பகுத்தறிவும், உண்மையறிய வேண்டுமென்ற விருப்பமும் இல்லாதவர்களேயன்றி, எம்மைப் போலும் **"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"** என்ற பண்டைத் தமிழர் ஒருமைப் பாட்டு நெறிவிளக்கத்தைக் கடைப்பிடித்து, மக்கட் பண்புக்கும் கடவுட் டன்மைக்கும் பொருத்தமற்ற கண்மூடி வழக்கங்களே மண்மூடிப் போகச் செய்ய வேண்டுமென்ற விருப்பமும் இல்லாதவர்களே யாவர். அன்றியும்,

"அறிவுக் கறிவாய் அகண்டமாய் நின்ற
நிறைவைக் குறைய நினேந்து - மறவையுமாய்த்
தாமே சிவத்தைப் படைத்தழிப்பார் தற்றேருடம்
போமா றில்லேப் பிறப்பேன் போம்"

என்று ஒழிவிலொடுக்கத்திற் கூறியபடி, மக்களின் அறிவோடு பிரிக்க முடியாதபடி பிணேக்கப்பட்டுள்ள நிறைந்த பொருளாகிய கடவுளேத் தம்மின் வேருய்ப் பிரித்து, அதற்கு வடிவம் முதலியன உண்டாக்கிப் பின் அதனே அழித்தலே பெரும் பாவமென்றும், அத்தகைய பாவம் எக்காலத்திலும் நீங்காதென்றும் சொல்லப்படும் உண்மையைக் கடவுளிடத்து நீங்கா அன்புள்ளவர்கள், தங்களுடைய பகுத்தறிவுடன் பொருந்த வைத்துப் பார்ப்பார்களாயின், அவர்கள் கடவுளிடத்து வைத்துள்ள போலிப் பற்றினின்றும் விடுபட்டு, மக்கட் பண்போடு உலகில் வாழ்வர் என்பதும் திண்ணம். மற்று, அவர்கள் தாம் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று, தாம் பிடித்ததையே நிலேநாட்ட முயல்வார்களானல்,

"மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றுங்
குறைவிலா அளவினாலுங் கூறொணாதாகி நின்ற
இறைவனார் கமல பாதம் இன்றியான் இயம்புமாசை
நிறையினார் குணத்தார்க் கெல்லாம் நகையினை நிறுத்து
மன்றே." (சித்தியார்)

என்ற சைவமத உண்மையின்படி, யாவராலும் அளவிட்டுக் கூறமுடியாத கடவுளின் தன்மையை அளவிட்டுக் கூறுபவர்கள், நிறைந்த அறிவினையுடைய நல்ல குணம் படைத்தவர்களால், 'ஏ! ஏ! இவர்கள் அறிவிருந்தவாறு என்னே! என்னே!) என்று எள்ளி நகையாடப்படுவரே' யன்றிப், பகுத்தறிவோடு கூடிய மக்கட் குழுவில் வைத்து எண்ணப்பட மாட்டார்கள். நான் இங்ஙனங் கூறுவதைக் கண்டு சில போலிச் சைவர்கள் என் மீது சீற்றங்கொண்டு, 'நீர் சிவஞான சித்தியாரிலுள்ள இப் பாட்டை மட்டும் எடுத்துக் காட்டி உம்முடைய கொள்கையை நிலைநாட்ட முயன்றீர்; சிவஞான சித்தியாரிலுள்ள இதற்கடுத்து வரும் பாடலைப் பார்த்தீரா' என்று கடாவக்கூடும். சிவஞான சித்தியாரில் இப்பாடலுக்கு அடுத்துவரும் பாடலில், 'ஆகமங்களாலும் மற்றைச் சைவமத நூல்களாலும் கடவுளை அறியலாம்' என்று சொல்லப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். ஆனால், அது முன்னுக்குப் பின் முரணாக வைத்துக் கூறப்பட்டிருப்பதோடு அமையாது, முன்கூறிய உண்மையை மறைத்து, மக்களை இந்துமதச் சுழலில் வைத்து மயங்க வைக்கச் செய்யும் ஒரு சூழ்ச்சியையும், அது தெற்றெனக் காட்டுகின்றது. அற்றேல், ஒரு இடத்தில் கடவுளை அறிய முடியாதென்றும், இன்னொரு இடத்தில் முடியுமென்றும், பிறிதோரிடத்தில் கடவுள் இல்லையென்றும் மற்றோர் இடத்தில் உண்டென்றும் நூல்களில் எழுதி வைத்து **மக்களை ஏமாற்றிப் பிழைப்பதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி** யென்ற முடிவைத்தான் அறிவுடையோர் காணமுடியும். அன்றியும், இந்துமதத்திலும் அதன் பிரிவுகளான **சைவம், வைணவம், காணபத்தியம், வைரவம், கௌமாரம், வாமம்**

முதலான மதங்களிலும் செரல்லப்படுவதுபோல், மற்றைப் **பௌத்த, கிறித்தவ, முகம்மதிய, யூத** மதங்களில் கடவுளைப் பறிறிப் பற்பல விதமாகக் கூறி மக்களை மயங்க வைக்கும் சூழ்ச்சி கையாளப்படுவதில்லை என்பதும் கூர்ந்து நோக்கற் பாலதாம். நாம் இப்படிக் கூறுவது கொண்டு, இந்துமதங்க ளல்லாத மற்ற மதங்களுக்கு உயர்வு காண முயல்வதாக எவரும் கருதிவிடலாகாது. மற்று, இந்துமதங்களில் உள்ளக் கடவுளருக்குக் கூறப்படும் அரு வருப்பானவும், பகுத்தறிவுக்குப் பொருந்தாதனவுமான கற்பனைக் கதைகள் அம்மதங்களில் உள்ள கடவுளருக்குப் பெரும்பாலும் கூறப்படுவதில்லை என்பதே. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் கூறுவதுபோல, இந்துமதக் கடவுளரையும் அக்கடவுளரின் பேரால் உள்ள மதங்களையும் மக்கள் நம்பும்படி செய்வதற்காகவே தான் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் கதைகள் சொல்லப் படுவது. மற்று, அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிறைந்துள்ள பொருளாகிய கடவுளுக்குக் கதைகள் கூறி, அவரை மெய்ப்பிக்க வேண்டிய இன்றியமையாமை எதுவும் ஏற்படக் காரணம் இல்லை. அன்றியும்,

> "அக்கினி தேவர்க் கசீர்த்தி யென்று சுக்கரைத்து
> வைக்கோலான் மூடி மலையடுப்பிற்—றுக்கியாய்
> நீரைக் கழுவி நிழலைப் புதைத் தளப்பார்
> ஆரைப் போல்வார் என்னலாம்"

என்று ஒழிவிலொடுக்கத்திற் கூறியபடி, எவரெவர் உண்ட உணவுகளை எல்லாம் அவரவர் வயிற்றுக்குள் இருந்து செரிக்கப் பண்ணும் நெருப்புக்கு அசீரணம் பிறந்ததென்று கருதி, அது நீங்குவதற்குச் சுக்கு அரைத்துக் கொடுத்து, அதனால் குளிர் பிறந்ததென்று வைக்கோல் போட்டு மூடுவது போலவும், மலையின் கீழ் அகப்பட்ட ஒருவன் படுந்துன்பம் போலவும், நீரை நீரினாற் கழுவுதல் போலவும், நிழல்மீது மண்ணைப்போட்டு அதனை மறைக்க முயல்வது போலவும், எங்கும் நிறைந்து அறிவாய் விளங்கும் கடவு ளுக்கு யாதோ குறை உள்ளதுபோற் கருதிக் குளிப்பாட்டிப் -

பொங்கல் படைத்து - மந்திரம் சொல்லி - மரியாதை செய்து வழி பாடு செய்ய வேண்டியதும் இல்லை. அங்ஙனம் செய்வோரை மக்கட் கூட்டத்தில் வைத்து எண்ணப்படா தென்பதற்காகவே, அத் தகையினரை '**யாரைப் போல்வார் என்னலாம்**' என்று அந் நூலாசிரியர் பெரிதும் இரக்கப்பட்டுக் கூறி யிருப்பதும் நோக் கற்பாலது. இங்ஙனம் அறியாமை வாய்ப்பட்டுக், கடவுளை அறிய வேண்டி, அங்கும் இங்கும் ஓடித் திரிந்து தம் வாழ்நாளைப் பாழாக் கும் மக்களின் இரங்கத் தக்க நிலையைக் கண்டே, அறிவுடையோர்,

> "கூலித் தொழிலாளர் கொண்டு விற்போர் போன்றகுரு
> வேலைப் பகிடிகளை மேவாதே........."

என்றும் கூறிப் போந்தனர். அதாவது, வேலைசெய்து கொடுத்துக் கூலி வாங்கிக் கொள்ளும் கூலித் தொழிலாளரைப் போலவும், ஒரு பண்டத்தைக் கொடுத்து வேறொரு பண்டத்தை வாங்கும் பண்ட மாற்றுத் தொழில் செய்வோராகிய வணிகரைப் போலவும், ஒரு கூட்டத்தார் தங்கள் பிழைப்புக்காகக், கடவுளைப்பற்றி இல்லா தனவும் பொல்லாதனவுங் கூறி, மக்கள் பாடுபட்டுத் தேடிய பொருள்களைப் பறிப்பதற்காகத் தாங்கள் மத குருமார் என்று சொல்லிப் பகிடிக் கூத்தாடி, மக்களை ஏமாற்றுகின்றனர். ஆகவே அவர்களை நம்ப வேண்டாமென்றும், அத்தகையினரை அணுக வேண்டாமென்றும், அறிவுடையோர் முன் கூட்டியே நமக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றனர் என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இல்லையேல், ஆற்று வெள்ளத்தால் அடிக்கப் பட்டு மிதந்து செல்லும் ஒரு கரடியையும் அதன், குட்டிகளையும் கண்ட ஓர் இடையன், அவை ஆடுகள் எனக் கருதி அவற்றைப் பிடிக்கச் செல்ல, அக்கரடிக் கூட்டம் அந்த இடையனையும் இழுத் துச் சென்று, ஆற்று வெள்ளத்தில் அமிழ்ந்திய நிலையைத் தான் அவர்களும் அடைவார்கள். நிற்க,

இந்த உலகத்தையும் இவ்வுலகிற் காணப்படும் உயிர்ப் பொருள், உயிரில் பொருளாகிய அனைத்தையும் கடவுள் ஒருவரே

படைத்தார். ஆகையால், கடவுள் நெறியைக் கூறும் மத நூல்களைப் பின்பற்றி அக்கடவுளை வழிபடுதலே முறையாம் என்று கூறுவோமாயின், அது பொருந்துவதாயில்லை. ஏனென்றால் கடவுளைப் பற்றிக்கூறும் இந்த மத நூல்களெல்லாம், கடவுள் இத்தகையினர் என்று அளவிட்டுச் சொல்லுதலும் பாவம் என்று முடிவு கட்டிக் கூறியுள்ளன. ஆகையால், அரைகுரையாக நாம் அறிந்த அளவில் வைத்துக் கடவுளை வழிபடுவது, அரைகுறையாகக் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் குடிபுகுவதையே ஒக்கும். அரை குறையாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் குடிபுகுந்த ஒருவன் மழை வெயில் முதலானவற்றினுல் துன்பப் படுவதோடு, அவனுடைய பொருள்களும் திருடரால் கவரப்பட்டு, அவன் அம்பலத்தில் நின்று தவிக்கவேண்டியும் வரும். அந்நிலையைத்தான் அரை குறையாக அறிந்த கடவுளை வழிபடுபவனும் அடைய முடியும். சிவஞான போதம் முதல், பெரிய புராணம் ஈருகவுள்ள இந்துமத நூல்கள் எல்லாம் '**உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்**' என்ற முடிவைத்தான் கிளந்து கூறுகின்றன. இனிச், சைவமதத்திற்குத் தாயகமாயுள்ள சிவஞான போதத்தைப் பற்றிய கருத்துக்கள் சைவர்களாலேயே இன்னும் முடிவுசெய்யப் பெறவில்லை. அவர்களில் ஒரு சாரார் அதனை வடமொழி நூலென்றும், இன்னொரு சாரார் அதனைத் தமிழ் நூலென்றும் இன்னும் வழக்காடிக் கொண்டிருக்கின்றனர்.

இனி, மக்கள் பகுத்தறிவோடு கூடியவர்களாதலால், அவர்கள், கடவுளை மத நூல்களிற் கூறியபடி வழிபடாதொழிதல் குற்றமாம் என்று கூறுவாருரையும் பொருந்தாததாகவே இருக்கின்றது. பகுத்தறிவைக் கடவுள் பழிபாட்டுக்குத் தான் பயன்படுத்த வேண்டுமென்பது மத நூலார் கொள்கையே யன்றி, அறிவு நூலார் கொள்கையன்று. நாம் முன்னமே எடுத்துக்காட்டியபடி, பகுத்தறிவற்ற செடி கொடிகளும், காக்கை கரிக்குருவி நாரைகளும், நாய் பன்றி முதலிய விலங்குகளும், கடவுளை வழிபட்டுப் பிறவாமையைப் பெற்றிருப்பதாக இந்துமத நூல்கள் நுவல்வதால், பகுத்

தறிவுக் கடவுளை அறிந்து வழிபடுவதற்கென்பது பொய்யுரையாம் என்று ஒழிக. பின்பகுத்தறிவென்பது, எற்றுக்குப் பயன் படுவ தென்றால், நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து, கெட்டதை நீக்கி நல்லதைக்கொண்டு தம் வாழ்க்கையைத் தன்மதிப்போடும் நேர்மை யாகவும் நடத்திச் சென்று, அதனால் தாமும் பிறரும் நற்பயன் எய்துதற்கேயாம்.

அங்ஙனமின்றி, அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான **சண்டேசுர நாயனர்** என்பவர், ஊரார் அவரிடம் மேய்ப்பதற் காக ஒப்படைத்த பசுக்களைக் காட்டுக்கு ஓட்டிச் சென்று, கறவைப் பசுக்களிடமுள்ள பாலைக்கறந்து, அதனை மணலில் (மணலால் செய்யப்பட்ட சிவலிங்கத்தில்) பெய்து பாழாக்குவதைக் கேள்விப் பட்ட மாட்டுடையவர்கள், சண்டேசுர நாயனரின் தந்தையாரிடம் முறையிட, அவர் காட்டுக்குச் சென்று தம் புதல்வன் செய்யும் அடாத செயலைக்கண்டு, அவரைத் தடிகொண்டடித்தும், அவன் கேளாமையால் பாற் குடத்தைக் காலினால் இடறிச் சிந்த, அது கண்ட சண்டேசுரர் தம்முடைய தந்தையாரின் கால்களை ஒரு மழு வினாலே வெட்ட, உடனே கடவுள் தமது மனைவியாரோடும் இடப வாகனத்தின் மீது எழுந்தருளி, ஆகாயத்தில் தோன்றிச் சண்டே சுரரை விளித்து "**நீ நம்பொருட்டு உன்னைப் பெற்ற தந்தை யாரை வெட்டினய், இனி உனக்கு நாமே தந்தை**" என்று அருளிச் செய்து, அவரை அணைத்து, அவருடைய திருவுடம்பைத் தடவி உச்சிமோந்து, கடவுள் தம்முடைய தொண்டர் குழாங்களுக் கெல்லாம் அவரைத் தலைவனுக்கினர் என்று கூறப்படும் பெரிய புராணக் கதை மக்களின் பகுத்தறிவை இழக்கச் செய்யுமா, அல்லது பகுத்தறிவை உண்டாக்குமா என்பதையும் இந்துமதத்தைக் கட்டி யழும் மக்கள், நன்கெண்ணிப் பார்த்தல் வேண்டும். இக்கதையில் சண்டேசுரர் மேய்ப்பதற்காக, ஊரார் அவரிடம் ஒப்படைத்த பசுக்களின் பாலை, அவர்களின் உடன்பாடு பெருமல் கறந்தது நம்பிகை மோசமும் பெருங்குற்றமுமாகும். அங்ஙனம் கறந்தபாலை மணலிற் சிந்தியது பகுத்தறிவற்ற முட்டாள்தனம். தந்தையாரை

வெட்டிக்கொன்றது இரக்கமற்ற கொடுஞ்செயல். இங்ஙனம் நம்பிக்கை மோசமும் முட்டாள் தனமும், கொலைக் குற்றமும் செய்த ஒருவனைக் கடவுள் கட்டியணைத்து முத்தங் கொடுத்துத் தம்முடைய மன்றத்தில் ஒரு தலைமைப்பதவியும் தந்தார் என்று இந்துமத நூல்கள் கூறுவதனால் தான் அறிவுடையோர் அத்தகைய மதத்தையும், அம்மதங்களுக்குத் தலைவர்களாயுள்ள கடவுளரையும் மக்கள் பின்பற்றித் தங்கள் அறிவையுங் காலத்யையும் பாழாக்குதல் கூடாதென்று அறைகூவிச் 'சொல்லுகிறார்கள். அற்றன்று, கடளின் அன்பையும் அருளையும் பெற்ற அடியார்களைக் குறை கூறுவதும், கடவுளிடத்தில் குற்றங் காண்பதும் தகாதசெயல் களென்று எவரேனுங் கூற முன்வருவார்களாயின், அத்தகையினர் சண்டேசுரர் செய்த செயலைப் போன்ற ஒரு நிகழ்ச்சியை எம்போல் வாரைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்காகவாவது செய்து காண்பிக்க முன் வருவீர்களாக.

ஆனல், ஆங்கில நன்மக்கள் எம்மை ஆளும் பொறுபபை ஏற்றுக்கொண்டிராவிட்டால், இதுவரை எத்தனையோ சண்டேசுரர்கள் எறிபத்தர்கள், இயற்பகைகள், குலச்சிறைகள், குங்கிலியக்கலையர் கள், சம்பந்தர்கள், மாணிக்கவாசகர்கள் தோன்றியிருப்பார்கள் என்பதும், அவர்களுக்கெல்லாம் புராணங்கள் எழுதப்பட்டிருக்கும் என்பதும் மட்டும் மறக்கமுடியாத உண்மையாக நாம் காணமுடியும். ஏதோ நல்ல வேளையாக ஆங்கில அரசினர் வந்து நம் மானத்தை ஓரளவு காப்பாற்றினர்கள்.

ஆரியர்கள் நம் நாட்டில் வந்து குடியேறுவதற்கு முன், அதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன், நம் நாடு எத்தகைய சிறந்த நிலையில் இருந்ததென்பதைப் பழைய சங்க நூல்களாலும், ஆரியர்கள் நம் நாட்டுக்கு வந்த காலந்தொட்டு ஆங்கிலேயர் நம் நாட்டுக்கு வந்த காலம் வரையிலுள்ள காலம், எத்தகைய கீழ்நிலையை அடைந்திருந்த தென்பதை அக்காலத்தில் எழுதப்பட்ட மத புராணக்கதைகளாலும் நன்கறியலாம். புராணங்

களில் காணப்படுவது போலக், கடவுள இடபத்தில் ஏறிவந்தார்; எலிமீதேறி அசைந்து வந்தார்; மயில், கருடன் முதலியவற்றில், ஏறிப் பறந்து வந்தார்; சடைமுடியோடும் பூணூலோடும் நடந்து வந்தார் என்றுவது, தந்தையைக்கொன்றவனுக்கு முத்தி, தாயைப் புணர்ந்தவனுக்கு மோட்சம், நம்பிக்கை மோசம் செய்தவனுக்குப் பதவி கொடுத்தார் என்றுவது சங்க நூல்களில் காணமுடியுமா? மற்றும், சங்க நூல்களில் எல்லாம், அக்காலத்து மக்களின் சீரிய வாழ்க்கையின் சிறப்பையும், அவர்களின் நாகரிக மேம்பாட்டையும், குடிமக்கட்குரிய கடமையையுஞ், சொல்லேர் உழவர்களின் நல்லெழில் வாழ்க்கையையும், அரசரின் போர்த்திறத்தையும், அவர்களின் நடுநிலைமையான அரசு முறையையும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உண்மையையும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒற்றுமையின் மேதக்க பண்பையும் இன்ன பிற செம்மை நெறிகளையுந்தான் நாம் காண்கிறோம். எனவே, பழைய சங்க நூல்களில் மக்களின் அரும்பெருஞ்செயல்கள் வியந்து கூறப் படுதலையும், ஆரியர் காலத்தெழுந்த புராணங்களில் கடவுளைப் பற்றியும் இந்து மதத்தைப் பற்றியும் கூறி, மக்களின் அறிவைப் பாழ்படுத்தியிருத்தலையும் ஒப்பு நோக்கிப் பார்ப்பவர், நாம் கூறும் உண்மையை மறக்கவோ, அன்றிப் '**புராணங்களை அழிக்கலாமா**' என்று பதட்டத்துடன் கூறவோ முன்வர மாட்டார்கள் என்பது துணிபு.

இனி, நாம் மேலே எடுத்துக்காட்டிய புராண கால நிகழ்ச்சிகள் இக்காலத்திலும் நடைபெறுமாயின், இப்போது நம்மை ஆளும் அரசினர், "இவை எல்லாம் கடவுளின் திருவிளையாடல்கள்" என்றெண்ணி வாளா இருப்பார்களா? அல்லது கொலை புரிந்தவனைத் தூக்கிவிட்டும், மோசம் செய்தவனைச் சிறையிலடைத்தும் அவனவன் செய்த குற்றத்திற் கேற்ற பரிகாரந் தேடுவார்களா ? என்பதையும் எண்ணிப் பார்ப்பவர்கட்கு, இந்து மதத்தின் பேரால் செய்யப்படும் பித்தலாட்டங்கள் விளங்காமற் போகாது. மற்றும், ராண காலநிகழ்ச்சிகள் எல்லாம் உண்மையாகவே நடந்தன என்று

கூறுவோமாயின், இக்காலத்தில் ஏன் அங்ஙனம் நடப்பதில்லை என்ற கேள்வி பிறக்கின்றது. அன்றியும், புராணகாலக்கடவுள் இப்போதில்லையென்றே, அல்லது ஆங்கில அரசுக்குப் பயந்து அக் கடவுள் தம்முடைய திருவிளையாடல்களைச் செய்யாமல் இருக்கின்றாரோ என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஒன்று, புராணங்கள் பொய் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; அல்லது கடவுளைப்பற்றி நாம் கூறும் உண்மைகளையாவது ஒப்புக் கொள்ள வேண்டும். இத்தகைய சிக்கல்களைப் பிரித்தறிந்து உண்மை காணுவதற்காகத்தான் **பகுத்தறிவு என்ற ஒரு தனியறிவு** மக்களிடம் காணப்படுகின்றது. அதனைப் பயன் படுத்தி உண்மைகாண்பதுதான் மக்கட் பண்பாகும். பண்டைத் தமிழ் மக்களின் பண்புபெற்ற வாழ்க்கையைத்தான் இன்று மேல்நாட்டவர் கைக்கொண்டு தாங்கள் பண்புபெற்ற வாழ்க்கையி (Cultured Life) ல் இருப்பதாகப் பெருமை யடித்துக் கொள்ளுகிறார்கள். இங்ஙனம் தமிழ்மக்களின் நல்லொழுக்கங்கள் எல்லாம் பிறரால் கையாளப்பட்டு, அவர்கள் எல்லாரும் தம் வாழ்க்கையை, வறுமையும் கவலையுமற்ற முறையில் நடத்தி மேன்மை யடைந்து வரவும், தமிழர்கள் மட்டும் தங்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்து, வறுமையுங் கவலையுமுற்று, எடுப்பார் கைப்பிள்ளைகளாய், 'நமக்கு இந்து மதம் வழிகாட்டும். கடவுள் அருள் செய்வார்' என்று, கள்ளக் காதலனை நம்பிக் கட்டிய கணவனைக் கைவிட்ட ஒரு பேதைப்பெண்போலத் தங்கள் அறிவையிழந்து நிற்கும் நிலையைக் காணும்போதுதான் நாம் உண்மையிலேயே வருந்துகின்றோம்.

"நேபாளம் தன்னரசுரிமை பெற்ற நாடு. ஆங்கில அரசுக்கு அது கீழ்ப்படியவில்லை. இக்காலத்திலும் மனுஸ்மிருதியின் கொடுங்கோலை அங்கேதான் காணலாம். அங்குசூத்திரர்கள் கல்வி கற்கவும், பொருளீட்டவும் உரிமை கிடையாது நல்லுணவு, நல்லணி, நல்லாடை, நல்ல வீடு, இவைகளும் இவர்களுக்கு ஆகாது. அதுவோ பனிமிகுந்த நாடு; ஆயினும், குடிசையில்

தான் வாழவேண்டும். பால் குடித்த சூத்திரனை மனுதரும நூல் வழியாக இன்றைக்கும் தண்டிக்கிறார்கள். சூத்திர சாதியில் எங்காவது அழகிய பெண் ஒருத்தி தோன்றுவாளாயின், அவள் பார்ப்பனருக்கும் அரசருக்கும் சொந்தம். இத்தகைய பெண்ணை அவளது தாய் தந்தையர்கள் அரசனிடத்தில் ஒப்புவித்துவிடவேண்டும் இவ்விதமாகச் சூத்திரர்களைச் சார்ந்தவரையில் மிகவும் பயங்கரமானது. இடைக்காலத்தில் ஆரியர்கள் ஆதிக்கம் பெற்றிருந்த நம் நாட்டிலும் இவ்வகையான கொடுங்கோலரசுதான் நடைபெற்றதோ வென நினைந்து வருந்தவும் இடம் ஏற்படுகிறது. தேச சரித்திரமும், சிற்சில வகுப்பாரின் ஒழுக்கங்களும் இதற்குச்சான்றும். இத்தகைய அரசாட்சியை வெறுக்க எந்த இந்துவுக்கும் உரிமையில்லை. திலகர், மாளவியா முதலிய இந்துமதத் தலைவர்களின் சுய ஆட்சித் திட்டமும் இத்தகையதே" என்று **சுவாமி சிவாநந்த சரசுவதியவர்கள்** தாம் எழுதிய '**ஞான சூரியன்**' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த உண்மையை நேபாளம் சென்று நேரில் பார்த்தவர்களில் நானும் ஒருவனாதலால், அதனை இங்கெடுத்துக் காட்ட நேர்ந்தது.

இனி, இந்து மதத்தை நிலைநாட்ட எழுந்த நூல்களெல்லாம் சிறப்பாக, மக்களை நல்வழியில் ஒழுகச் செய்து அவர்களை மோட்சம், அதாவது பிறவாமையை எய்துவிப்பதே அவற்றின் நோக்கமென்றும் சொல்லப்படுகிறது. அதனையும் ஒரு சிறிது ஆராய்வோம். இந்து மதம் மற்ற மதங்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியதென்று சொல்லப்படுகிறது. "இவ் வுலகிலுள்ள மத நூல்களில் மிக முந்தினது இந்துமத இருச்கு வேதமே" என்பது வடமொழிப் பேராசிரியரான மாக்ஸ் மூலர் (Max Muller) என்ற மேனாட்டறிஞரின் கருத்தாகும். எனவே, சோதிட நூற் கணக்கின்படி உலகந் தோன்றி 192 கோடி ஆண்டுகள் கழிந்துவிட்டன வென்பதை உண்மையென்று நம்பி, அதன்படி ஆராய்ச்சி செய்யாவிட்டாலும், இருக்குவேத காலத்தையே மதம் தோன்றிய காலமாக வைத்து ஆராய்ந்து பார்த்தாலும், இந்துமத நூற் கொள்கையின்

படி, இந்துக்களிற் பெரும்பாலார் பிறவாமையாகிய மோட்சத்தைப் பெற்றிருக்கவேண்டும். அப்படிப் பெற்றிருந்தால் 'இந்துக்கள் தொகையில் குறைந்திருக்க வேண்டும். ஆனல் பத்துக்கோடியாக இருந்த இந்துக்கள், இன்றைக்கு இருபத்திரண்டு கோடியாகப் பெருகியிருக்கின்றனர், பொதுவாக எல்லா மதங்களையுஞ் சேர்த்துப் பார்த்தாலும் பதினறு கோடியாக இருந்த இவ் இந்தியமக்கள் இன்றைக்கு முப்பத்தாறு கோடியாகப் பெருகியிருக்கின்றனர். இந்துக்களாய்ப் பிறந்தாலும், அவர்களுக்கு எளிதில் பிறவாமையாகிய பேறு கிடைத்து விடுவதில்லை. ஏதோ ஆயிரத்துக்கொருவர், பதிஞயிரத்துக்கொருவர் தான் பிறவாமையைப் பெறுகின்றனர் என்ற இந்துமத நூற் கொள்கையின்படி பார்த்தாலும், தொகை குறைய வேண்டுமே யன்றிப் பெருகக் காரணமில்லை. ஆனல், மக்களல்லாத பிற உயிர்களெல்லாம் அந்தந்தப் பிறவி கொண்டு பிறவாமையைப் பெறமுடியாது; மககளாய்ப் பிறந்துதான் அப்பேற்றை அடைதல் கூடும். ஆகவேதான் மக்களின் தொகை பெருகிக்கொண்டு வருகின்றதென்று கூறுவதும் பொருந்துமாறில்லை. ஏனென்ருல், மக்கள் மட்டும் பிறவாமைப் பேற்றை அடைவதில்லை. மக்களல்லாத விலங்கு, பறவை, செடி கொடி முதலானவைகளும் பிறவாமைப் பேற்றை அடைந்துள்ளன வென்று இந்துமத நூல்கள் கூறுவது ஒருபுறமிருக்க, விலங்கு, பறவை, செடி கொடி முதலியவைகளின் தோற்ற வளர்ச்சிகளை ஆராய்ந்த அறிஞர் பலர், அவைகளும் தொகையிற் பெருகிக் கொண்டு வருகின்றன வென்றே கூறுகின்றனர், ஆகவே, எப்படிப் பார்த்தாலும் உயிர்களின் தொகை பிறவாமைப் பேற்றைக்காரணமாகக் கொண்டு குறைந்திருப்பதாகத் தெரியவில்லை. அன்றியும் உயிர்கள் பிறந்திறப்பதைக் கண்கூடாகக் காண்கின்ருேமேயன்றி, **உபமன்னியுமாமுனிவர்,** சுந்தரமூர்த்தி நாயனர் பிறவாமையைப்பெற்று வெள்ளை யானையில் ஏறி, வான்வெளியில் சென்றதைக் கண்டதாகச் சொல்லப்படும் காட்சிகள் எதையும் 'சினிமா' என்று சொல்லப்படும் படக் காட்சிகளிலன்றி வேறெந்த வகையிலும் இப்போது நாம் காண முடிவதில்லை.

காரணம், நாம் எல்லாரும் 'மாயையினுல் மறைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே. ஆனுல், மாயையை வென்று, 'பகவான்' பட்டத்தைப் பெற்றுத் திருவண்ணுமலையில் எழுந்தருளியிருக்கும் **இரமண முனிவர்** போன்றவர்க்காவது, 'மகாத்மா'ப் பட்டத்தைப் பெற்று 'அந்தராத்மா' வுடன் அடிக்கடி பேசிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் வார்தாக் **காந்தியாருக்காவது** அத்தகைய காட்சிகள் தென்படுகின்றனவா என்று பார்த்தால், இல்லையென்றே தெரிகிறது. இரமண முனிவருக்குக் கனவிலும், மகாத்மாவுக்கு நினைவிலுந்தான் கடவுள் வந்து பேசிப்போவதாக அவர்களே சொல்லுகிருர்கள். ஆகவே, இக்காலத்தில், கடவுள் ஒருவருக்கும் நேரில் வந்து காட்சி அளிப்பதில்லை என்பது முடிவாகிறது. என்ருலும் கடவுளை நேரில் கண்டு எந்தக்காலத்திலும் இறவாத வரத்தைப்பெற்று, இன்றும் உயிரோடுஇருப்பதாகச் சொல்லப்படும் **மார்க்கண்டேயர், அநுமார்** முதலானவர்களைக் கண்டாவது கடவுளைப்பற்றிய புதுமைகளைக் கேட்டறியலாமென்ருல், அவர்களுடைய இருப்பிடமும் நமக்குத் தெரியவில்லை. இதுவும் மாயையின் திருவிளையாடல்போலும்!

எனவேதான் நாம், இக்காலத்தில் இந்துமதக் கடவுளைப்பற்றியும், இந்துமதத்தைப்பற்றியும் மக்கள் கவலைப்படவேண்டியதில்லையென்றும், தமிழருக்கு அன்பும் அறிவுமே கடவுளென்றும், உபமன்னியு மாமுனிவர் போன்றவர்கள் தோன்றி இந்துமதக் கடவுளை நேரில்காட்டியபின், வேண்டுமானுல் இந்துமதக் கடவுளைப்பர்றியும் அம்மதத்தைப்பற்றியும் நாம் கவலை எடுத்துக்கொள்ளலாமென்றும், இப்போது மக்கள்தங்கள் அறிவையும் உழைப்பையும், பொருளையும் தங்கள் அன்ருட வாழ்க்கைக்குப் பயன் படுத்தித் தாமும் தம்மைச் சார்ந்தாரும் நோயும் வறுமையும் கவலையுமற்ற திருந்திய செல்வ நிலையில் இருந்து, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற மெய்யறிவோடு வாழ்க்கையை நடத்திச் செல்லவேண்டுமென்றுங் கூறுகிறோம்.

இனி, உலகிலுள்ள எல்லா வகுப்பினருக்கும் அவரவர்களின் கொள்கைகட்கு ஏற்றவாறு மதங்கள் ஏற்பட்டிருக்கிறதாகையால், தமிழ் மக்களும் தங்களுடைய கொள்கைக்கு ஏற்றவாறு ஒரு மதத்தைப் புதிதாக ஆக்கிக்கொள்ளலாமென்றால், இந்து மத மின்றிய ஒரு புதுத் திட்டத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாகத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ளுதலே முறையாகும். அன்றியும் இந்துமதம் என்ற ஒருசொல்லே தமிழில் இல்லையென்றும், இந்துமதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தால் அது 'வெறி' அல்லது 'மயக்கம்' என்ற பொருள்களைத்தான் தருமென்றும் அறிவுடையோர் கூறுகின்றனர். ஆயினும், '**இந்துமதம்**' என்றால் '**ஒழுக்கம்**' அல்லது '**நெறி**' என்பதுதான்பொருள் என்று, இந்து மதப்பித்துக்கொண்ட சில படித்த தமிழ் அறிஞர் கூறுவராயின், அது "சுக்குத்திப்பிலி மிளகு" என்ற தொடர்மொழியை ஒருவன் '**சுக்குத்திப்'—பிலி மிளகு**' என்றுபிரித்துக்கொண்டு, பிலிமிளகு என்ற ஒருவித மிளகைக்கொண்டுவந்து ஒரு புது மண்பாண்டத்திலிட்டுச் சுக்கே விறகாகத் தீமூட்டி எரித்துக், குடிநீர் (கஷாயம்) செய்து சாப்பிட்டால், எல்லாவிதமான சுரங்களும் நீங்கும்" என்று பொருள் கூறுவது போலவும், 'அரி, சிவசம்பு' என்ற தொடர் மொழியை ஒரு புலவன் '**அரிசி - வசம்பு**' என்று பிரித்துப் பொருள் கூறுவது போலவுமே இருக்கும். '**மதம்**' என்பதை 'ஒழுக்கம்' என்று சொல்வதும், இனிப்புக்கும் கசப்புக்கும் எவ்வளவு வேறுபாடுஉண்டோ, அவ்வளவுவேறுபாடு இந்துமதத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உண்டு. அன்றியும், '**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**' என்பது தமிழர் கொள்கை. ஒழுக்கத்தை (மானத்தை) விற்றேனும் உயிரைக் காப்பாற்றவேண்டும் என்பது இந்துமத நூலார் கொள்கை. எனவே, ஒழுக்கம் என்ற விழுப்பந்தரும் சொல், இந்து மதம் என்ற வெறியைத் தரும் சொல்லோடு எவ்வாற்றானும் இயையாதென்று கடைப்பிடிக்க.

இனித், தமிழ் நாட்டில் வழங்கும் தேவார திருவாசகங்கள் தமிழ்வேத மாகையால், அவற்றை ஆதாரமாகக்கொண்டு தமிழ்

மக்கள் தங்களுக்கு ஒருமதத்தை ஆக்கிக் கொள்வதேமுறை என்று சிலர் வழக்காடித் தம்கொள்கையை நிலைநாட்ட முயல்வர். தேவார திருவாசகங்களைப் பற்றிக் குற்றம் கூறுவிட்டாலும், அவற்றின் அமைப்பைப் பற்றியாவது ஆராய்வது குற்றமாகாதென்று நம்பு கிறேன். தேவார திருவாசகங்களெல்லாம், இந்துமதக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, அம்மதக் கடவுளின் பேரில் பாடப் பெற்றன வென்பது ஒருபுறமிருக்க, அவை எல்லாம் தமிழ் மக்க ளுக்கும், அதிலும் அறிவாராய்ச்சியிற் சிறந்த தமிழ்ப் பேரறிஞர் களுக்கும் உடன் பாடல்லாதனவான **பதினெண்புராணக்கதை களையும், இராமாயணம், பாரதம்** முதலான காவியங்களையும் ஆதாரமாகக்கொண்டு பாடப்பட்டனவேயாம் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள் என்பதோடு, இப் பதினெண் புராணக் கதை களும் இராமாயண பாரதக் கதைகளும் இல்லாவிட்டால், ஒரு பதி கங் கூடப் பாடியிருக்க முடியாதென்பதும், ஐயுறவின்றித்தெரியக் கிடக்கின்றது. எனவே, ஆரியர்கள் தங்கள் பிழைப்பிற்காகவே புராண இராமாயண பாரதக் கதைகளை ஏற்படுத்திக் கொண்டார் கள் என்பதை ஒப்புக்கொள்ளும் தமிழறிஞர், அக்கதைகளையே ஒவ்வொரு பாடலிலும் சான்றுகள் காட்டிப் பாடப்பெற்ற தேவார திருவாசகங்களை ஆதாரமாகக் கொண்டு **'தமிழர் மதம்'** என்ற ஒன்றை நிறுவினால், தமிழ்மக்கள் ஆரியச்சூழ்ச்சியினின்றும், ஆரிய மதமாகிய இந்து மதத்தினின்றும் விடுபட்டுத் தனித்தமிழராக வாழமுடியுமா என்பதையும், தமிழ் நாட்டைத் தமிழருக்காக ஆக்கிக்கொள்ள முடியுமா என்பதையும், இந்துமத சட்டத்தை (Hindu Law) மாற்றி அமைத்துக்கொள்ள முடியுமா என்பதை யும் ஆழ்ந்தெண்ணிப் பார்த்தல்வேண்டும். சற்றேறக்குறைய 8550 பாடல்கள் தேவாரம் திருவாசகமாகிய இரண்டிலும் இப்போது உள்ளன. இவற்றில் ஒரு பாடலையாவது இந்துமத புராண இதி காசங்களை நீக்கிப் பாடியதாகக் காண முடியாது.

அன்றியும், இம் மூவர் பாடிய தேவாரப் பதிகங்கள் முழுவ தும் **இந்து மதத்திற்குமுதனூலாகவுள்ள இருக்கு** முதலான

வேதங்களில் இருந்து எடுக்கப்பட்ட சாரம் என்றும் சொல்லப்படு கிறது. எப்படி யென்றால்,

"வேதம் பசுவதன்பால் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் றிறம்."

என்றிங்ஙனம் சைவமதத்திற்குத் தாயகமாயுள்ள சிவஞானபோதச் சிறப்புரையில் கூறப்பட்டுள்ளது. அதாவது, வேதங்களை ஒரு பசுவாகவும், **சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் ஆகிய மூவரும் பாடிய தேவாரம் அப்பாலினின் றெழும் நெய் யாகவும்**, சிவஞான போதம் அந்நெய்யிற் காணப்பெறுஞ் சுவை யாகவும் வைத்துக் கூறப்பட்டிருப்பதால், தேவாரத்தைத் தமிழ் மக்கள் தங்கள் நூலாக ஒப்புக்கொள்வதும், அதனை ஆதாரமாக வைத்துத் தமிழருக்கு ஒரு மதத்தை ஆக்கிக்கொளலும் யாங்ஙனம் இயலும். இருக்கு முதலான வேதங்களும், அவற்றின் வழி நூ சார்பு நூல்களாக எழுந்த ஆகமங்கள், முதலியனவும் தமிழ்மக்களின் நெறிக்கு மாறுபட்டனவாகக் கருதி ஒதுக்கும்போது, வேதத்தின் பேரப்பிள்ளையாகிய தேவாரத்தை மட்டும் தமிழ் மக்கள் தங்களதா கக் கொள்ளுதல் பொருந்துமா என்பதனையும் நம்மவர் ஊன்றிப் பார்த்தல் வேண்டும்.

இனித் தேவாரப் பதிகங்களிற் பெரும்பாலான செல்லரித்து விட்டன என்றும் சொல்லப்படுகிறது- ஒருவேளை அழிந்துபோன அப்பதிகங்களில் புராண இதிகாசக் கதைகள் கலக்கப் பெறுமல் பாடப்பெற்றிருக்கலாம். அப்பதிகங்களிலெல்லாம் தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களைப்பற்றி வியந்து பாடியிருப்பதைக் கண்டே ஆரியப்பார்ப்பனர், அப்பதிகங்களை எல்லாம் அழித்துவிட்டுச், செல்லரித்துப் போயின என்ற கதையைக் கட்டிவிட்டனரே என்று ஐயுறவும் இடம் ஏற்படுகிறது. ஏனென்றால், தேவாரப்

பதிகங்கள் எல்லாம் சிதம்பரத்திலுள்ள கனகசபைக்குப் பின்புறத்தில் ஓர் அறையில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரின் கையடையாளங்களுடன் சேமித்து வைக்கப்பட்டுள்ளன வென்று, திருநாரையூரிலிருந்த **பார்ப்பனராகிய நம்பியாண்டார் நம்பிக்கு**, அவ்வூரிலுள்ள பொல்லாப் பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளினரென்றும், அதனையறிந்த **குலசேகரன்** என்ற சோழமன்னன், நம்பியாண்டார் நம்பியையும் உடன் அழைத்துக்கொண்டு சிதம்பரம் சென்று, பொல்லாப் பிள்ளையார் கூறிய அடையாளப்படி கதவைத்திறந்து பார்த்தபோது, ஏடுகளிற் பெரும்பாலன செல்லரித்துக்கிடந்தது கண்டு, அவர்கள் பெரிதும் வருத்தமுற்றதாகவும், அது கண்ட கடவுள் மறைவாக (அசரீரியாக) வந்து, இப்பதிகங்களில் இக் காலத்திற்கு வேண்டுவனவற்றை நீக்கி, ஏனையவற்றைச் செல்லரிக்கும்படி நாமே கட்டளையிட்டோம்'' என்று கூறியதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையாகவே ஏடுகள் செல்லால் அரிக்கப்பட்டிருப்பின், அரிக்கப்பட்டவை போக எஞ்சியிருந்த நல்ல ஏடுகளை எடுத்ததாகக் கூறுவதை விட்டுச் செல்லரித்ததற்குச் சாட்சி சொல்வதற்காகக் கடவுள் அங்கே வந்தார் என்று கூறவேண்டியதில்லை. அங்ஙனங் கூறுவதினின்றும் நாம் அறியக்கிடப்பதென்ன வென்றால், நம்பியாண்டார் நம்பி என்ற பார்ப்பனர், தாம் கதவைத் திறந்து ஏடுகளை எடுத்துப் பார்த்தபோது, அவற்றில் பெரும்பாலன தம் கொள்கைக்கு மாறுபடப் பாடப்பெற்றிருத்தலைக்கண்டு, அவற்றை எல்லாம் கிழித்தெறிந்து விட்டுத் தமக்கு உடன்பாடுள்ளவற்றை மட்டும் தெரிந்தெடுத்திருக்கவேண்டும். அங்ஙனந் தெரிந்தெடுத்த பதிகங்களிலுஞ் சிற்சில பதிகங்களில் பாடல்கள் குறைந்தும், பற்பல பதிகங்களில் பாடல்கள் மிகுந்தும் இருத்தலைக்கண்ட் அக்காலத் தமிழறிஞர் அதன் காரணத்தை அறியமுயன்றபோது, நம்பியாண்டார் நம்பியும் அவரைச்சார்ந்தாரும், ஏடுகள் பலவற்றைச் செல்லரித்து விட்டதாகவும், அதற்குக் **காரணம் கடவுளே சொல்லியுள்ளார்** என்றும் கதையை முடித்து, அங்ஙனம் கேட்டவர்களை நம்

பும்படியுஞ் செய்திருத்தல் வேண்டும். ஆரியர்கள் அங்ஙனஞ்செய்த தற்குத் தக்க காரணம் இருப்பதால்தான், இதனை இவ்வளவு விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. அதன் காரணத்தையுஞ் சுருக்கமாகக் கூறுகின்றேன், கேட்க.

தேவாரத்தைப்பற்றிய வரலாற்றில், மூவரும் சேர்ந்து ஒரு நூறுயிரத்து இரண்டார்யிரம் (1,02,000) பதிகங்கள், அதாவது ஏறக்குறையப் பத்துநூறுயிரத்து இருபதிணுயிரம் (10,20,000) பாடல்கள் பாடியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில்,

திருநாவுக்கரசர்......49,000 பதிகங்களும்
சுந்தரர்...............37,000 பதிகங்களும்
சம்பந்தர்.............16,000 பதிகங்களும்

ஆக 102,000 பதிகங்களும்

இதிற் செல்லரித்ததாகச்சொல்லப்படும் பதிகங்கள் போக, இப்போதுள்ள பதிகங்களில்,

சம்பந்தருக்கு........384 பதிகங்களும்
திருநாவுக்கரசருக்கு.311 பதிகங்களும்
சுந்தரருக்கு..........100 பதிகங்களும்

ஆக 795 பதிகங்களே இப்போது எஞ்சியுள்ளன. இனி மூவர் பதிகங்களிலுஞ் செல்லரித்த கணக்கையுங் கீழே தருகின்றேன்.

சுந்தரர்............36,900 பதிகங்களும்
சம்பந்தர்..........15,616 பதிகங்களும்
திருநாவுக்கரசர்...48,689 பதிகங்களும்

ஆக 1,01,205 பதிகங்களாகும்.

இந்தக் கணக்கின்படி, திருநாவுக்கரசரே மற்ற இருவரைப் பார்க்கிலும் மிகுதியான பதிகங்கள் பாடியிருப்பதாகத் தெரிகிறது. அதிலுந் திருநாவுக்கரசருடைய பதிகங்களே பெருந் தொகையாகச்

செல்லுக்கிரையாகி இருப்பதாகவும் தெரிகிறது. ஏடுகள் எல்லாஞ் செல்லரித்து மண்ணோடு மண்ணாய்ப்போயிருந்திருப்பின், அவற்றை யெல்லாம் எப்படிக் கணக்கெடுத்திருக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. ஒருவேளை படிப்பதற்கு முடியாமல், சிற்சில இடங்களில்தான் செல்லரித்திருந்தன வென்றால், அதை ஒருவாறு ஒப்புக்கொண்டாலும், திருநாவுக்கரசருடைய பதிகங்களை, மட்டும் பெருந்தொகையாகச் செல்லரித்திருந்ததாகக் கூறப்படுவதன் காரணம் என்ன? திருநாவுக்கரசர் இனிமையாகவுந் திறமையாகவும் பாடியதனால், அவருக்கு நாவுக்கரசர் என்ற சிறப்புப் பெயர் கிடைத்ததாகையால், அவருடைய பாடல்களிலுள்ள சுவை மிகுதி தெவிட்டுதலில்லாததாய் இருந்தது. அதனால் செல்லு அவருடைய பதிகங்களை மிகுதியாகச் சாப்பிட்டுவிட்டதென்ற ஒரு காரணத்தைத் தவிர, வேறுகாரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், செல்லு ஏட்டைத்தின்றதா? அல்லது பாட்டைத்தின்றதா? என்ற கேள்வி பிறந்தால், செல்லுக்கு ஏட்டில் பாட்டிருப்பதும் இல்லாததும் தெரியாது, அது ஏட்டைத்தின்றபோது பாட்டும் ஏட்டோடு தொலைந்து விட்டது என்று தான் சொல்லமுடியும்.

ஏடுகளைச் செல் அரிக்கவில்லை என்பதற்கு யாம் கூறும் இன்னுமோர் காரணத்தையும் அன்பர்கள் கருத்தூன்றிப் பார்த்தல் பெரிதும் இன்றியமையாததாகும். அதாவது, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் பாடியதாகக் கூறப்படும் தேவாரப் பதிகங்களில், அம்மூவரும் பாடிய முதற் பதிகங்களும் இறுதிப் பதிகங்களும் செல்லின் வாயில் அகப்படவில்லை. மூவருடைய பதிகங்களிற் பெரும்பாலன செல் அரித்துப்போயின வென்பது உண்மையானால், அவர்கள் பாடிய மூதல் இறுதிப் பதிகங்களில் ஒரு பாடலாவது செல்லுக்கு அகப்படாமல் தப்பியது வியப்பாகவே இருக்கிறது. கடவுளின் திருவருளால் அவை தப்பின என்று சொன்னால், அது பொருந்தா உரையாம். ஏனெனில், மூவர் பாடிய தேவாரம் முழுவதும் கடவுளின் கட்டளையால், அவருடைா

அருளைப் பெற்றே பாடப்பட்டனவாகக் கதையிற் காணப்படு கின்றது. இங்ஙனம் கடவுளின் கட்டளையும் அருளும் பெற்றுப் பாடப்பட்ட பதிகங்களைப் பின் செல் அரித்த தென்றால்; செல் கடவுளைப் பார்க்கினும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெரும் பொருளாக வன்றோ மதிக்கப்படல் வேண்டும்; அல்லது அப்பதிகங் களைப் பாடுவதற்குக் கடவுளின் கட்டளையும் அருளும் கொடுக்கப் படவில்லை என்றாவது கூறவேண்டும். அங்ஙனமின்றித், தேவாரப் பதிகங்கள் எல்லாம் கடவுளின் அருளாற் பாடப்பட்டன வென்று கூறிவிட்டுப் பின் செல் அரித்து விட்டதென்று கூறுவது முன் னுக்குப் பின் முரணாய் இருப்பதுமன்றிக், கடவுள் தன்மைக்கும் மாறு பட்டதாய் இருக்கின்றது. அன்றியும், தேவாரப் பதிகங்கள் எல்லாம் கடவுளின் திருவருளைப் பெற்றே பாடியன வென்று கூறிவிட்டுப் பின் அவை செல் அரித்து விட்டன வென்று கூறுவதும், அங்ஙனம் செல் அரிப்பதற்குங் கடவுளே கட்டளை யிட்டார் என்று தணிவு (சமாதானம்) கூறிக் கதை எழுதுவதும், அக் கதைகளைப் படிப்பவர்கள் மீது அறியாமையை ஏற்றி அவர்களை மூட நம்பிக்கைக்கு ஈர்த்துச் செல்வதாகவுமே இருக் கிறது. எனவே, தேவாரப் பதிகங்கள் எல்லாங் கடவுளின் கட்டளையோ அன்றி அவரின் அருளையோ பெற்றுப் பாடப் பட்டன அல்ல வென்பதும்; மேற்கூறிய தேவார வரலாற்றில் காணப்படும் பதிகங்கள் எல்லாம் மூவரால் பாடப்பெற்றுப் பின் அவற்றுள் பெரும்பகுதியைச் செல்அரித்து விட்டதாகக்கூறுவதை மெய்யெனக்கொள்ளுவது ஏலாதென்பதும், தேவாரப் பதிகங்களில் பெரும்பகுதி இல்லாமல் ஒழிந்ததற்கு நாம் கூறும் மறுக்க முடி யாத காரணமே மெய் என்பதும், யாவராலும் யாதொரு ஐயுறவு மின்றி ஒப்புக்கொள்ளப்படும்.

எனவே, திருநாவுக்கரசரின் பதிகங்களைச் செல்லுந் தின்னவில்லை; மண்ணுந் தின்னவில்லைப்; **பார்ப்பனச் சூழ்ச்சி**தான் தின்று விட்டதென்ற முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது. ஏனென் றால், திருநாவுக்கரசர் ஒரு தமிழனாய்ப் பிறந்ததால், அவர் தமிழ்

மக்களுடைய பழக்க வழக்கங்களையும், ஒழுக்க நாகரிகங்களையுந் தமது பாடலில் வியந்தும், இந்துமதமாகிய சைவமதத்திலுள்ள பித்தலாட்டங்களை விளக்கியும் பாடி இருந்திருப்பார். பார்ப்பனர் அதுகண்டு மனம்பொறுமல் அவருடைய பதிகங்களை அழித்திருத்தல் வேண்டும். அதோடு, திருநாவுக்கரசருடைய பதிகங்களை மட்டும் அழித்தால் பின்னல் கேள்விக்கிடமாகு மென்பதை முன் கூட்டி அறிந்தே அவ்வாரியப் பார்ப்பனர்கள், பர்ர்ப்பனராகிய சுந்தரர் சம்பந்தருடைய பதிகங்களையும் செல்லரித்துவிட்டதாகக் கதை கட்டி வைத்து, அச்சூழ்ச்சியை இன்றுவரை எல்லாரும் நம்பும்படியுஞ் செய்துவிட்டனர். என்னே சூழ்ச்சி! என்னே பித்தலாட்டம்! என்னே ஏமாற்றம்! கொடிதுகொடிது! ஆரியம் கொடிது! அதனினுங் கொடிது! ஆரியர்செய்யும் இந்துமதச்சூழ்ச்சி! **ஆரியர்களும் ஆரியமதக் கடவுளருஞ் சேர்ந்து தமிழ் மக்களை எவ்வளவு இழிவு படுத்தியிருக்கிறுர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள் !** எனவே, தேவார திருவாசகங்களை ஆதாரமாக வைத்துத் தமிழர்க்கு ஒரு மதத்தை நிறுவுவதால், தமிழர் இந்து மதக் கலப்பினின்றும் விலகித் தனித்து வாழுதல் ஏலாதென்பது, இதுகாறும் நாம் விளக்கியதுகொண்டு துணியப்படும்

இனிச் சங்க நூல்களெல்லாம் தமிழ் நூலும், தமிழர் நூலுமாதலால், அவற்றை ஆதாரமாகக்கொண்டு, தமிழருக்கு ஒரு மதத்தை நிறுவுதல் ஏலாதோவெனின், கூறுவோம். சங்க நூல்களுக்கும் மதத்திற்கும் எந்த விதமான உறவும் உடன் பாடுங் கிடையாதென்பதை, அந் நூல்களை நன்கு பயின்ருேர் தெள்ளிதில் அறிவர். மதத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒன்றைக் கூடச் சங்க நூல்களிற் காண்டல் இயலாது. நாம் முன்னரே எடுத்துக் காட்டியபடி, சங்கநூல்களெல்லாம் மக்களின் அறிவைப்பெருக்கி, அவர்களைத் தன்மதிப்போடும், வீரஞ் செறிந்த உள்ளத்தோடும், பிறர்பால் இரக்கங் காண்பிக்கும் எளிமையோடும், எவர்க்கும் அடிமையாகாது எல்லார்க்கும் அன்பாய் இருத்தல்வேண்டுமென்ற கொள்கையோடுங் கூடிய நல்லுரைகளே அந்நூல்களில் எங்குப்பார்த்தாலுங்

காணப்படுவதால், அந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு மதத்தை உண்டாக்க எண்ணுவது அறிவுடைமையாகாது. பொதுவாக இந்துமத நூல்களில் எதை எடுத்துப் பார்த்தாலும், அவைகளெல்லாம் மக்களின் அறிவைக் குலைத்து, அவர்களின் தன்மதிப்பையும், வீரத்தையும், இரக்கத்தையும், அன்பையும் இழக்கச் செய்வதும், சிறப்பாக மக்களை அடிமைப் படுகுழியில் விழச் செய்வதுமாகவே காணப் படுகின்றன. சுருங்கச் சொல்ல வேண்டுமானுல், **இந்துமதம் என்பது மக்களுக்கு அடிமை மனப்பான்மையை உண்டாக்க எழுந்த ஒரு கருவியாகும்,** ஆனுல், சங்க நூல்கள் அப்படியன்று. அவை மக்கள் எந்தவகையிலும் எவருக்கும் அடிமையாய் இருத்தல் ஆகாதென்பதையே வலியுறுத்திக் கூறுகின்றன. **கடவுளிடத்திலுங்கூட மக்கள் அன்பாயிருத்தலேயன்றி, அடிமையாய் இருத்தல் எவ்வாற்ருனும் ஆகாதென்று** பசுமரத்தாணிபோல் நன்கு வலியுறுத்திக் கூறுகின்றன. நாம் கூறும் இவ்வுண்மை, **'நெற்றிக் கண்ணைத் திறத்தாலுங் குற்றங் குற்றமே'** என்று சங்க கால நக்கீரர் கூறிப் போந்த இவ்வொரு சான்று கொண்டு வலியுறுதல் காண்க.

இனி, நாம் இவ்வளவு கூறியும் ஒப்புக்கொள்ளாமல், தமிழ் மக்களுக்கு இந்துமதமே வேண்டுமென்று எவரேனுந் தாம்கொண்ட கொள்கையையே நிலைநாட்ட முயல்வார்களானுல், அவர்கள் முதலில், இப்போதுள்ள இந்துமதத்தின்பேரால் தமிழ் மக்களிடையே வேரூன்றியிருக்கும் அடிமை மனப்பான்மையை நீக்குவதற்காகத் தங்கள் முயற்சியையும் உழைப்பையும் அறிவையும் பயன்படுத்திப் பார்ப்பார்களானுல், அவர்கள் தாங்களாகவே இந்துமதம் வேண்டுமா வேண்டாமா என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள். பின்னர் நாம் கூறுவதன் உண்மையையும் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். எனவே, இப்போது தமிழ் மக்கள் இந்துமதத்தின்பேரால் அடைந்திருக்கும் அடிமை உணர்ச்சியையும், அதனுல் ஏற்படும் பொருள் அழிவையும் ஓரளவு போக்குவதற்கான திட்டங்களை வகுத்து வேலைசெய்ய நமது

தமிழறிஞர்கள் வழி காட்டுவார்களானல், அவர்களின் அறிவும் ஆராய்ச்சியும் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டதாகும். அங்ஙனஞ் செய்வதை விட்டுத் தாம் மிக அரிதில் ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகளை யெல்லாம் கடைசியாகக் கடவுளிடத்தும் மதத்தினிடத்தும் கொண்டு வந்து புகுத்தித், தமக்கும் அறிவாராய்ச்சியற்றவர்க்கும் யாதொரு வேறுபாடும் காணமுடியாத நிலைமையை அடைந்தால், மக்கள் தங்கள் மிடிப்பட்ட வாழ்க்கையினின்றும் விடுபட்டு முன்னேறிச் செல்வதென்பது எக்காலத்திலும் முடியாததாகும்.

இனி, முற்காலத்தில் நமது தமிழ் நாட்டில் இருந்த ஆராய்ச்சித்துறை கண்ட பெரியார்களையும், இப்போது நம்மிடையே உள்ள ஆராய்ச்சி மிக்க அறிஞர்களையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால், அவர்களுக்கும் இவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு காணப்படுகின்றது. அக்காலத்துத் தமிழறிஞர் தாம் கண்டறிந்த உண்மைகளைப் பிறர்க்கெடுத்துரைப்பதில் தினைத்துணையும் பின்வாங்குதலின்றி, அவற்றை மக்களுக்கு விளங்கக் கூறி நல்வழிப்படுத்திய செய்திகள் பலவற்றைச் சங்க நூல் வரலாறுகளிலிருந்து நாம் இன்றும் அறிகின்றோம். ஆனல், இக்காலத்துள்ள தமிழறிஞரிற் பெரும்பாலார் '**இரண்டு ஓடத்தில் கால் வைப்பது**' போல இந்துமத நூல்களையும், அறிவு நூல்களையும் ஒன்றாய்ப் பிணைத்து மக்களின் அறிவை மழுங்க வைத்து, அவர்களை உண்மை உணர முடியாத நிலைக்குக் கொண்டுவந்து விடுகின்றனர். இதற்குக் காரணம், **அவர்கள் இளமையிலேயே அறிவு நூல்களைப் படியாமல், மத நூல்களையே படித்து, மத உணர்ச்சியில் தங்கள் அறிவை ஊறவைத்திருப்பதே. இங்ஙனம் மத உணர்ச்சியில் ஊறப்பெற்ற தங்கள் அறிவோடு, பின் அறிவு நூல்களைப் படிப்பதால் அவர்கள் மத உணர்ச்சியினின்றும் தம் அறிவைப் பிரித்து உண்மை காணமுடிவதில்லை.** அவர்களையும் மீறி ஏதாவது உண்மை அவர்கள் ஆராய்ச்சிக்குத் தென்பட்டால், அதையும் எப்படியாவது மதத்

தோடு சேர்த்துப் பிணைத்து விடுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, இந்துமதத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட கதைகளில் ஒன்றை உங்கள் முன்னிலையில் ஒப்படைக்கிறேன். அதைக்கொண்டு நாம் கூறும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு காலத்தில், சைவமதக் கடவுளான சிவ பிரானும், அவர் மனைவியாரான உமாதேவியாரும் ஒரு பூஞ்சோலையை யடைந்து, அங்கு வேடிக்கையாக ஒருவரையொருவர் கட்டியணைத்து விளையாடிக்கொண்டிருந்த போது, அவர்களுக்குப் புணர்ச்சியில் விருப்பமுண்டாயிற்று. எனவே, அவர்கள் எந்தவிதமான புணர்ச்சியைச் செய்தால் நீண்டநேரத்திற்கு அவ்வின்பக் கடலில் மூழ்கி மகிழலா மென்பதை ஆராய்ந்ததில், யானையின் வடிவம் எடுத்துப் புணர்ந்தால் தான் முடியுமென்பதைக் கண்டார்கள். உடனே, எல்லாம் வல்ல சிவன் ஆண் யானை வடிவத்தையும், உமை பெண் யானை வடிவத்தையும், எடுத்துத் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள். அத்தகைய புணர்ச்சியின் பயனாகப் பிறந்தவர் தான் விநாயகர் என்னும் யானைமுகக் கடவுள் என்பது புராணக்கதை. இத்தகைய தமிழ்ப் பேரறிஞர்களிற் பலர் நம்புவது மில்லை. ஒப்புக்கொள்வது மில்லை. காரணம் முழுமுதற் பொருளாகிய சிவன் இத்தகைய அருவருப்பான காட்டுமிராண்டிச் செயலைச் செய்திருக்க மாட்டார் என்பதே. ஆனால் இந்தக் கதையைச், சைவமதக் குரவருள் ஒருவரான சம்பந்தர் தமது தேவாரத்தில் அமைத்துப் பாடியிருக்கிறார். அப்பாடல் வருமாறு,

"பிடியதன் உரு உமைகொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர்பயில் வலிவலம் உறையிறையே"

மேற்சொன்ன புராணக் கதையை மிகவும் அருவருத்து வெறுத்தொதுக்கும் நஞ் சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள், அக்கதையை அப்படியே அமைத்துப் பாடப் பெற்ற இத்தேவாரத்தை எவ்வளவு அழகாகக், கேட்போர் மனங்கரையும் முறையில் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் பாடி மகிழ்கின்றனர்! புராணத்தில் பார்க்கும்போது அருவருப்பாய்த் தோன்றிய கதை தேவாரத்தில் வந்து ஏறியவுடன் அவர்களுக்கு எவ்வளவு இனிப்பாய்த் தோன்றுகிறது பாருங்கள்! இதற்குக் காரணம், அவர்களிடமுள்ள இந்துமதப் பித்தமேயன்றி

வேறெதையாவது சொல்லமுடியுமா? இதுபோன்ற பகுத்தறிவுக் கொவ்வா நிகழ்ச்சிகள் ஏற்படுவதால் தான், **படித்தவர்களின் அறிவைக்கூட** இக்கொடிய இந்துமத உணர்ச்சி **மயக்கிவிடுகிறதென்று** நாம் மேலே எடுத்துக் காட்டினோம். யான் இங்ஙனம் கூறியதன் மெய் பொய்களை யாராவது அறிய விரும்பினால், இப் பாடலை மனப் பாடம் பண்ணிக் கொண்டாவது அல்லது எழுதி யெடுத்துக் கொண்டாவது, யாரேனும் ஒரு சைவத் தமிழ்ப் பேரறிஞரிடம் சென்று, சிறிது தொலைவாகவே நின்று கொண்டு, **பெரியீர்! இப்பாடல் மிகவும் அருவருப்பான கதையைத் தன்னகத்தே கொண்டதாக இருக்கிறதே! இத்தகைய கதைகள் தமிழ்மக்கள் கொண்டிருக்கும் கடவுள்முறைக்கு ஏற்றதல்லவே! ஆகையால், இப்பாடலைத் தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ளலாமா?"** என்று கேட்டுப் பாருங்கள். உடனே அவர், **"ஓகோ! சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றுப் பாடப்பட்ட தேவாரத்தைக் குறைகூறவா என் முன் வந்தாய்! ஏ! சிவத் துரோகியே! மதத் துரோகியே! அப்புறம் செல்! இங்கே என்முன் நிற்காதே!"** என்று உங்களை வைது விரட்டி விடுவார்களேயன்றி, அப்பாடலின் உண்மை **காண** ஒரு போதும் விரும்பவேமாட்டார்கள்.

இனி, இத்தகைய சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள், தம்மத மல்லாத ஏனையமதங்களை யெல்லாங் குறை கூறிக் குற்றம் காண்பதற்காகத் தங்கள் அறிவாராய்ச்சிகளைப் பயன்படுத்துவதில் ஒரு சிறிதும் பின்வாங்க மாட்டார்கள். **'உங்கள் கடவுள் அப்படிப்பட்டவர்; எங்கள் கடவுள் இப்படிப்பட்டவர்; 'எங்கள் கடவுள் மனிதன் தானே; 'எங்கள் கடவுள்—0—தானே'** என்றெல்லாம் வம்பளப்பதிலும் அவர்கள் பின் வாங்குவதில்லை. இங்ஙனம் இவர்கள் பிற மதங்களில் குற்றங்காண முயல்வது **'மணற் சோற்றில் கல் ஆராய்வது'** போலத், தாம் கைக்கொண்டிருப்பதும் **ஒரு மதம் தானே** என்பதையும் உணராமல், பிற மதங்களில் குற்றங்கண்டு குறை கூறித் திரிகின்றார்கள். பொதுவாக மதங்களெல்லாம் ஒரே கொள்கையைத் தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன வென்பதை யறியாமல், அவற்றில் உயர்வு தாழ்வு காண விழைவது பின்னும் எப்படி யிருக்கிறதென்றால், ஒருவன் **'பூ விற்ற காசு மணக்கும்; புலால் விற்ற காசு நாறும்'** என்று எண்ணுவது போலவுமே இருக்கிறது.

எனவே, தமிழ் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ் இந்துமதச் சுழலிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளைத் தேடிக்கொள்வதோடு, இந்துமதம் இனியும் மேற்கொண்டு நம்மைத் துன்புறுத்தி அடிமைப் படுகுழியில் தள்ளாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்துமதம் நம் நாவலந்தீவில் [இந்தியாவில்] பரவிய காரணத்தால்தான் அதன் கொடுமை தாங்க முடியாமல் கோடிக்கணக்கான மக்கள் கிறித்தவமதத்தையும், முகம்மதிய மதத்தையும் தழுவியுள்ளார்கள் என்பதையும், இந்துமத நூல்களைப் படித்த அல்லது கேட்ட காரணத்தால்தான் இன்றைக்கு ஏறக்குறைய இரண்டரைக்கோடி மக்கள் நாடோடிகளாய் [சந்நியாசிகளாய்] உலகம் நிலையற்றதென்ற வேதாந்தத்தைப் பேசிக்கொண்டும், மடங்களில் இருந்து பலவித இன்ப நிகழ்ச்சிகளை நுகர்ந்துகொண்டும் நிலத்துக்குச் சுமையாய்க் காலங்கழிக்கிறார்கள் என்பதையும், தமிழ் மக்கள் தங்கள் கருத்திற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆனால், நான் இங்ஙனமெல்லாம் கூறுவது கொண்டு, இனித் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை எப்படி ஏற்படுத்திக் கொள்வது? அதற்கு வழி யாது? என்று கேட்கக் கூடும். கிறித்தவர்களும், முகம்மதியர்களும், பிறரும் தங்களுக்கெனத் தனித் தனி மதமும், மத நூல்களும் ஏற்படுத்தி, தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களே! தமிழர்களுக்கு அங்ஙனம் ஒரு ஒழுங்கான திட்டம் வேண்டாமா என்றும் கேட்கலாம். வேண்டாம் அல்லது கூடாது என்று நாம் கூறவில்லை. மற்றும், இப்போது தமிழ்ம க்களின் வாழ்க்கை முறைக்கு வழிகாட்டக் கூடியனவாகக் காணப்படுவன வெல்லாம் இந்து மதத்தையும், அம்மத நூல்களையும் அடிப்படையாகக் கொண்டனவாக இருப்பதால், அவற்றை ஆதாரமாகக்கொண்டு தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆகாதென்பதைத்தான் நான் இங்கெடுத்துக் கூறியுள்ளேன்.

எனவே, **தமிழ்மக்களுக்கு இந்து மதத்தைப் புகுத்தி அவர்களை அடிமைகள் ஆக்காத முறையில்,** திருக்குறளை (அதன் இடைச் செருகல்களை நீக்கி) ஆதாரமாக வைத்துக்கொண்டு தமிழர்களின் வாழ்க்கை முறைக்கேற்ற சட்டதிட்டங்களை ஏற்படுத்திக்கொள்வதோடு, பிற மதத்தினருக்கு இருப்பது போன்ற கட்டுப்பாடுகளும், அவற்றிற்குரிய சட்டதிட்டங்களும் ஏற்படுத்தவும் வேண்டும். பண்டைக்காலத்தில், அதாவது ஆரியர், முதலான

அயல் நாட்டினர் நம்மிடையே வந்து கலப்பதற்குமுன், தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பிறர் கைப்பற்றாத முறையில் தங்கள் வாழ்க்கை முறைகளைச் செவ்வனே நடத்தி வந்தனர். ஆனால், இப்போது அங்ஙனம் நடைபெறமுடியாதபடி பலவிதமான கொள்கைகளும், திட்டங்களும், பற்பல மதத்தினர்களால் கொண்டுவந்து புகுத்தப்பட்டுத், தமிழர்களுக்கென்ற ஒரு தனிப்பட்ட கொள்கையோ, திட்டமோ இல்லை என்று எண்ணக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் '**யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்**' என்பன போன்ற கட்டுப்பாடற்ற முறைகளை இந்து மத நூலார் தங்கள் மத நூல்களில் எழுதி வைத்துப் போனதோடு, இடைக்காலத்திருந்த தமிழ்ப் பேரறிஞர்களும் ஒரு தெளிவான முறையைக் கையாளாமல், தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் நடக்கத் தலைப்பட்டுவிட்டதுமாகும். ஆகவே, முற்காலங்களில் பலர் பலவிதமாகச் சொல்லியும் எழுதியும் வைத்துப் போனவைகளை ஆராய்ந்து, உண்மை காண விரும்பும் இவ் இருபதாம் நூற்றாண்டில் உள்ள தமிழ் மக்களின் நிலைமையையும், எதிர்கால நிலைமையையும் எண்ணிப்பார்த்துப், பல வகையில் சிதறுண்டு கிடக்கும் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, ஒரு கட்டுப்பாட்டுடன் வாழக்கூடிய முறையில் தமிழ் மக்களுக்கென்ற ஒரு தனிப்பட்ட சட்டதிட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் இக்காலத் தமிழ்ப் பேரறிஞர்களின் கடமையாகும்.

எனவே, நான் இதுகாறும் ஆங்காங்கு எடுத்துக் கூறிய உண்மைகளை, அறிவுடையோர் நடுநின்று நன்காராய்ந்து பார்த்தல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இதனை இப்போதைக்கு இவ்வளவில் முடித்துக்கொள்கிறேன்.

திருத்தம்.

45-வது பக்கம் 10-வது வரியில் — திருநாவுக்கரசர் ஆகிய மூவரும் பாடிய தேவாரம்—என்பதற்குப் பதிலாகத் — திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிய தேவார திருவாசகங்கள்—என்று திருத்தி வாசிக்கவும்.